www.tamilarangam.net

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 23-04-1993

## பேச்சுவார்த்தைக்கு இடம் கொடுக்க நோர்வே தயார்

யாழ்ப்பகுதி, போக்குவரத்திற்கு துண்டிக்கப்பட்டிருப்பதால் எமது நிவாரணப் பணிகள் பாதிப்படைகின்றன. நேரில் யாழ் செல்வதும், தகவல்களைப் பெறுவதும் இயலாதுள்ளது. மக்களின் கஸ்டங்களைக் கண்டு பரிதாபப்படுகின்றோம். இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மத்தியஸ்த்தம் வகிக்கவும், சம்பந்தப்பட்டவர்கள் பேச்சுவார்த்தை நடாத்த இடம் கொடுக்கவும் நோர்வே தயராக உள்ளது." இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த 'பேருட்' அமைப்பின் இலங்கை நிப்பிடப் பிரதிநிதியான நோர்வேயைச் சேர்ந்த போல் ன்றிக் கெயிலன் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறினார்.

# சூறாவளி – 1 இராணுவ நடவடிக்கை

# முறியடிப்பு

## புலிகள் அநுராதபுரம் – மன்னார் – மணலாறில் ஊடுருவித் தாக்குதல்

பலாலி சிறீலங்கா இராணுவ தளத்திலிருந்து, தரைநகர முயன்ற சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்னடைந்தது.

"ஒபரேசன் சுளிசுலங்" என்னும் சிங்களப் பெயருடன் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. 'சுளிசுலங்' என்பதற்கு தமிழில் சூறாவளி என்பது பொருள்.

பலாலி கிழக்குப் பகுதியிலிருந்து தரை நகரமுயன்ற இராணுவத்தினரை புலிகள் எதிர்த்து தாக்குதல் நடத்தினர். அச்சுவேலி -தொண்டமானாறுப் பகுதிகளை நோக்கிய பகுதிகளிலேயே பலத்த மோதல்கள் இடம்பெற்றதாக யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. டாங்கிகள், கவச வாகனங்கள் சகிதம் நவீன போர் விமானங்களின் துணையுடன் ஆரம்பித்த இந்நடவடிக்கை விடுதலைப் புலிகளின் உறுதியான எதிர்ப்பினால் முறியடிக்கப்பட்டது. இதனையடுத்து சிறீலங்கா தலைமைப்பீடம் சூறாவளி-1 ன் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தது.

### ஊடுருவித் தாக்குதல்

சிங்களப் பிரதேசமான அநுராதபுர மாவட்டத்திலுள்ள கெப்பற்றிக்கொலாவ என்னும் இடத்திலமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. இக் காவலரண்கள் மீதான தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஏனைய இராணுவத்தினர் இக்காவலரண்களிலிருந்து பின்வாங்கி ஓடியதையடுத்து இக்காவலரண்களை விடுதலைப் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

சிங்களப் பிரதேசத்தினுள் நடைபெற்ற இத்தாக்குதல், புலிகளின் ஊடுருவித்தாக்கும் திறனை நிரூபிப்பதாக உள்ளது. இதனால் சிங்களப் பிரதேசத்தில் காவலில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரிடை அச்ச மனோபாவமும், விரக்தியும் காணப்படத் தொடங்கியுள்ளதாக இராணுவ வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மன்னார்த் தாக்குதல்கள்

சிறீலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் மன்னார்ப் பிரதேசத்தினுள், விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து வெற்றிகரமான தாக்குதல்களை நடாத்தியதன் மூலம் தமிழீழத்தின் ஒரு அங்குல நிலத்தில் கூட சிறீலங்கா இராணுவத்தால் நிலை கொள்ள முடியாது என்பதை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளனர். மன்னார் ஓலைத்தொடுவாயில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கொமாண்டோ படையினர் நடாத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவக் கப்டன் ஒருவர் உட்பட 7பேர் கொல்லப்பட்டுள்ளனர். இராணுவ முகாமிற்கு அருகில் நடைபெற்ற இத்தாக்குதல், மன்னாருக்கு வந்த சிறீலங்கா

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## சிங்கள நாட்டில்

# 50,000 பொலிசாருடன் மாகாணசபைத் தேர்தல்கள்

### 200 வாக்காளருக்கு ஒரு பொலிஸ்

சிங்கள நாட்டின் மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் வைகாசி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் 200 வாக்காளருக்கு ஒருவர் என்ற விதத்தில் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. 50000 பொலிசார் தேர்தல் கடமையில் ஈடுபடுவது சிறீலங்கா அரசிற்கு சிங்கள மக்கள் மத்தியில் உள்ள எதிர்ப்பு நிலையை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் வழமைபோல் சிறீலங்காவின் முப்படையும் தேர்தல் நடைபெறும் வேளை தமது பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர் எனவும் தெரியவருகிறது.

இதற்கிடை இத்தேர்தலை மேற்பார்வையிட சார்க் அமைப்பிலிருந்து அல்லது வெளிநாடுகளிருந்து சிறீலங்கா அரசு ஒரு அவதானிகள் குழுவொன்றை அழைக்கவிருப்பதாக தெரிகிறது. இது சிறீலங்கா அரசின் நடவடிக்கைளை சிங்கள மக்கள் சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதன் வெளிப்பாடு என அவதானிகள் கருதுகின்றனர். மாகாணசபைத் தேர்தல் வடக்கு, கிழக்கில் நடைபெறாதது சிறிலங்கா இப்பிரதேசத்தில் தனது இறைமையை இழந்துள்ளதே காரணம். அத்துடன் வடக்கும் கிழக்கும் ஒன்றான மாகாண சபை ஒன்று 1987 ஆம் ஆண்டு இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் பெயரளவில் இயங்கி வந்தது. இந்த அதிகாரமற்ற மாகாணசபை ஒரு உள்ளூர் ஆட்சிக்குள்ள அதிகாரங்களை விட குறைவான அதிகாரங்களையே கொண்டிருந்தது. தற்போது வடக்கையும் கிழக்கையும் இரண்டாகப் பிரிக்க நினைக்கும் சிறீலங்கா அரசு வடக்கு, கிழக்கு மாகாணசபையை வடக்குக்கு ஒன்று, கிழக்குக்கு ஒன்றென பிரிப்பதற்கு சட்டவலு அற்று காணப்படுகிறது என அவதானிகள் கருகின்றனர். இதற்கிடை இத்தேர்தல் மேடைகளில் பேசிய சிங்கள அரசியல்வாதிகள் சிலர் வடக்கில் நடைபெறுவது அர்த்தமற்ற யுத்தம் என வர்ணித்துள்ளனர்.

மாத்தறையில் திருமதி. சந்திரிகா விஜயகுமாரணதுங்க பயங்கரவாதத்தை பயன்படுத்தி பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சிக்கு யுத்தமும், பயங்கரவாதமும் அவசியம் தேவை என்று கூறியதுடன் வடக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு அரசியல் தீர்வு காண்பதே சிறந்தது எனவும் கூறியுள்ளார். ■

## தென் தமிழீழத்தில்

# இரண்டு அதிகார சக்திகள்

### பி.பி.சி. நிருபர் பகிரங்க அறிவிப்பு

தென் தமிழீழமான மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்கள் தமது பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாக சிறீலங்கா இராணுவத்தினரும் சிறீலங்கா அரசும் அறிவித்து வருகின்றனர். இவர்களது கூற்றுக்களில் உள்ள பொய்மையை சமீபத்தில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த B B C நிருபர் வெளிப்படுத்தியுள்ளார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு அதிகாரசக்திகள் உள்ளன . சிறீலங்கா இராணுவம் மட்டக்களப்பில் கூட இரவில் நடமாடத் தயங்குகிறது. கிராமங்களில் எல்லாம் புலிகளே பகிரங்க பாதைகளில் நடமாடுகின்றனர். சிறீலங்கா இராணுவம் அச்சம் மிகுதியால் காடுகளுக்கு தீமூட்டி வருகிறது. இது சூழல் பாதுகாப்பிற்கு பாரதூரமான நட்டத்தினை ஏற்படுத்தி வருகின்றது. சிறீலங்கா இராணுவம்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தவறினால் வரலாறு திருத்தும்

இலங்கைத் தமிழர் தேசிய இனம் என்பதை சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தனது புத்தாண்டு செய்தியில் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார். "தேசிய இனம் என்ற வகையில் நாங்கள் ஒன்றுபட்டால், எமது முன்னேற்றத்தை எந்தச்சக்தியினாலும் தடுத்துவிடமுடியாது", என்பது பிரேமதாசாவின் செய்தி. தமிழர் தேசிய இனம் என்பதும், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதும் தெளிவாகி வருவதை சிறீலங்கா ஜனாதிபதியின் பேச்சு மேலும் தெளிவுபடுத்துகிறது.

ஆனால் இவ்வாறு கூறும் பிரேமதாசா பங்களாதேசில் நடைபெற்ற சார்க் உச்சி மகாநாட்டின் முடிவில் பேசிய பேச்சு வியப்பூட்டும் ஒன்றாக உள்ளது. "இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசாங்கம் மிகவும் அக்கறையாக உள்ளது. இதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழு தயாரித்துவரும் திட்டத்திற்காக அரசாங்கம் காத்துள்ளது." என்பதே அப்பேச்சு. உண்மையில் சிறீலங்கா ஜனாதிபதி கனவுலகில் வாழ்கின்றாரா? அல்லது நனவு உலகில் வாழ்கின்றாரா ? பாராளுமன்றத் தெரிவுக்குழு உருப்படியான எதையும் செய்ய முடியாமல் திண்டாடுவது அவரின் கண்களுக்கு தெரியவில்லையா? அல்லது பாராளுமன்றத் தெரிவுக் குழுவைக் காட்டியே இரண்டு வருடங்களுக்கும் மேலாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வந்த பிரேமதாசா, அதே ஏமாற்று வித்தையைத் தொடர முயல்கின்றாரா? இதே வேளை பிரேமதாசாவின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மற்றொரு நாடகத்தை நடாத்தி முடித்துள்ளார். சில தனிப்பட்டவர்களை அழைத்து இனப் பிரச்சினை தீர்வு குறித்து ஆலோசித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதேவேளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்த கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஜி. எல். பீரிஸ் சிறீலங்கா அரசியல் அமைப்பின் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாணசபைகளுக்கு மேலும் கூடுதலான அதிகாரங்கள் வழங்குவதற்கான சாத்தியங்கள் குறித்து யோசனைகள் அடங்கிய ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாக மற்றொரு செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. இவைகளைப் பார்க்கையில் பௌத்த சிங்கள மேலாண்மைக்குள், பௌத்த சிங்களக் குடியரசின் அரசியல் அமைப்பைக் கொண்டு ஒரு தீர்வைத் திணிப்பதையே பிரேமதாசா "அரசியல் தீர்வு" என்று பேசிவருமாற் போல் தெரிகிறது.

ஒரு புறம் அரசியல் தீர்வைப் பற்றிப் பேசும் அதே பிரேமதாசா தான், யாழ் குடாநாட்டின் மீது கடுமையான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விடுகிறார். உணவை ஆயுதமாக்கி மக்களை, அதிலும் குறிப்பாக குழந்தைகளைச் சாகடிக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறார். போக்குவரத்துத் தடை, பொருளாதாரத் தடை போன்ற தடைகளூடாக முற்றுகை யுத்தத்தை நடாத்தி மக்களுக்கெதிராகப் பேராடி வருகிறார். வாழ்வின் நாளாந்த தேவைகளுக்காகவும், மனித நேய உறவுகளைத் தேடியும், கிளாலிக் கடலேரியூடாகப் பயணம் செய்த -செய்கின்ற, நூற்றுக்கணக்கான பொது மக்கள் பிரேமதாசாவின், கடலேரிப் போக்குவரத்து தடையினால் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் வருகின்றனர். தென் தமிழீழத்தில், முப்படைகளின் துணைகொண்டு, சிங்களக் குடியேற்றங்களை நடாத்தியும், தமிழர்களை விரட்டியும் தமிழர் தாயகத்தை அபகரிக்க முயன்று வருகிறார். தமிழீழ விடுதலைப்புலிகளை, எவ்வகையிலாவது பலமிழக்கச் செய்து விட்டால் தமிழ்த் தேசிய இனத்தின், தேசநிர்மாணப் போக்கினை (Nation Building Process) மாற்றியமைத்து விடலாம் எனப் பகற் கனவு காண்கிறார்.

ஆனால், இராணுவத்தீர்வின் இயலாமைநிலை, மீண்டும் பலாலி, மன்னார், மணலாறு வரை நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தம் எல்லை மீறிவிரிவு பெறுவதை, சிங்கள நாட்டின் எல்லைகளுள் நடைபெறும், புலிகளின் ஊடுருவித் தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கடந்த இரண்டரை ஆண்டுகால யுத்தம் தரும் பாடத்தை பிரேமதாசா கருத்தில் எடுக்க வேண்டிய நேரம் இது.

இலங்கையில் நடைபெறும் பிரச்சினை, பெரும்பான்மை - சிறுபான்மை இனப்பிரச்சினையல்ல. காலனித்துவ பிரிட்டிஸாரால், ஏதேச்சதிகாரமான முறையில் , செயற்கையாக ஒற்றையாட்சியின் கீழ் பிணைக்கப்பட்ட, தனித்தனியான அரசுக்களைக் கொண்டிருந்த, தமிழ் -சிங்களத் தேசிய இனங்களுக்கிடையிலான பிரச்சினை. இதனைப் பிரேமதாசா கவனத்தில் கொண்டால் மட்டுமே, "அரசியல் தீர்வு" என்பது அர்த்தமுடையதாக மாறும். தமிழ்த்தேசியத் தலைவர் பிரபாகரன், "தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஸ்டி அமைப்பை பரிசீலிக்கத் தயார்" என விடுத்துள்ள அறிவிப்பை ஏற்பது ஒன்றே, தமிழ் -சிங்களத் தேசிய இனங்கள், இலங்கைத் தீவில் அமைதியோடு வாழ ஒரே வழி. இல்லையேல், காலனித்துவ ஆட்சிக்கு முன்பு இருந்தது போல, தனித்தனி இறைமையுள்ள அரசுக்களின் கீழ் தமிழ் -சிங்கள [illegible]கள் வாழும் நிலையை வரலாறு தோற்றுவிக்

# யாழ். பல்கலைக் கழகத்தின் பெயரில் ஒரு மோசடி

யாழ். பல்கலைக்கழகஆசிரியர் மனித உரிமைகள் குழு என்ற ரீதியில் கொழும்பிலிருந்தும், லண்டனிலிருந்தும் ஒரு குழுவினரால் தொடர்ச்சியாக பல அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்களின் பேரில் இவ்வறிக்கைகள் வெளிவருவதினால் இதற்கு சர்வதேச மட்டத்திலும், செய்தித் தொடர்புச் சாதனங்கள் மட்டத்திலும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் கிடைக்கப்பெறுகின்றது.

ஆனால் யாழ். பல்கலைக் கழகத்தின் பெயரால் இவ்வறிக்கைகளை வெளியிடுபவர்கள் யார்? இவர்களுக்கும் யாழ். பல்கலைக் கழகத்துக்கும் என்ன தொடர்பு உள்ளது? இவ்வாறான ஒரு அமைப்பு தற்பொழுது யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்தில் உள்ளதா? அவ்வாறு இல்லாவிடில், இவ்வாறனதொரு மோசடியை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஏன் பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கின்றார்கள்?

இது தொடர்பாக அறிந்த வரையில் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறிய ஒருசிலரே இவ்வறிக்கைகளுக்குப் பொறுப்பாக இருப்பதாக தெரியவருகின்றது. இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் இவர்களின் அறிக்கைக்கும், தமக்கும் எது வித தொடர்பும் இல்லை என சில மாதங்களுக்கு முன் உள்ளூரில் அறிக்கை ஒன்றின் மூலம் மறுத்ததுடன் தமது கடமை முடிந்து விட்டது என எண்ணியிருப்பது போல் தெரிகிறது.

ஆனால், இவ்விவகாரம் இன்று சர்வதேச மட்டத்தில் பேசப்படுவதினால், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களும் இது குறித்து சர்வதேச மட்டத்தில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் பெயரில் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒரு மோசடிக்கு இவர்களே அனுமதியளித்துள்ளார்கள் எனப் பொருள் கொள்ளப்படுவதில் தப்பேதும் இல்லை.

இந்நிலையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள், மனிதநேய ஸ்தாபனங்கள், உலக நாடுகளின் தூதுவராலாயங்கள், வசதி ஏற்படின் சர்வதேச செய்திஸ்தாபனங்கள் என்பவற்றின் ஊடாக இதனை மறுக்க முன்வரவேண்டும். அப்பொழுதே இம்மோசடிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.

இதேவேளை, மனித உரிமைகள் குழு எனக் கூறிக்கொண்டு மோசடியில் ஈடுபடும் இக் குழுக்கள் பற்றி சர்வதேச மனித உரிமைக்குழுக்களும், ஏனைய அமைப்புக்களும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு பெரிய அமைப்பின் பெயரில், ஒரு சிலர் புரியும் மோசடியை விளங்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால், மாறாட்டங்களில் ஈடுபடும் இக்குழுவினால் இவ் அமைப்புக்களும் அவப் பெயர்களையே சம்பாதிக்க வேண்டிவரும் என ஈழநாதம் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. ■

# செஞ்சிலுவை ஊழியர்கள் கொல்லப்பட்டனர்

சிறீலங்கா இராணுவத்தின் சூறாவளி-1 இராணுவ நடவடிக்கையின் போது நோயாளியை ஏற்றிக் கொண்டு சென்ற செஞ்சிலுவைச்சங்க வாகனம் ஒன்று தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இதில் வாகன சாரதியுடன் செஞ்சிலுவைச்சங்க அதிகாரி கே. புவனேந்திரனும் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அச்சுவேலி-ஆவரங்கால் பகுதியில் வைத்தே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் இறந்த கே. புவனேந்திரன் யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் துணைத் தலைவராவார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# உலக அரங்கில் முன்மாதிரியாக தமிழீழப் பெண்கள்

"எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புப் பெற்று வருகின்றது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை" இவ்வாறு சர்வதேச மகளிர் தினம் குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவர் பிரபாகரனின் இவ் அறிப்பானது, தமிழீழப் பெண்களின் இன்றைய யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. உண்மையில் இன்று தமிழீழப் பெண்கள் போராட்டத்திற்குள் ஒரு போராட்டத்தை நடத்திக் கோண்டிருக்கின்றார்கள். தமிழீழ ஆண் வர்க்கத்தினர் தமது தேசிய சுய நிர்ணய உரிமைக்காக மட்டும் போராடிக் கொண்டிருக்கையில், பெண்களோ தேசிய ஒடுக்குமுறைக்கு மட்டுமல்லாது, காலம் காலமாக தமது சமூகத்திலேயே தமக்கு எதிரான அடக்குமுறைக்கும் எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதில், தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் தமிழீழ பெண்களின் முன் மாதிரி உலகத்திற்கே எடுத்துக் காட்டான தொன்றாகும். நீண்ட காலமாக ஆண் ஆதிக்கத்தின் பிடியில் இருந்து வந்த ஒரு சமூகத்தில் இருந்து உலகிற்கு முன்னுதாரணமாக திகழும் ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்தக் கூடிய அளவிற்கு சமூகத் தளைகளை அறுத்தெறிவதென்பது இலகுவில் நடத்தக் கூடியதொன்றல்ல. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர், இது ஒரு கருத்து நிலை அம்சமாகவே இருந்தது. சிலர் இதனைக் கிண்டல் கூடச் செய்தனர். ஆனால், இன்று இதன் செயற்பாடும், வளர்ச்சியும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் ஒன்றாகவே உள்ளது.

மேலும், கடந்த பத்தாண்டு காலப் பகுதியிலும், தேசிய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திய பெண்கள் நிலைநாட்டிய சாதனைகள் அளப்பரியது. உலகையே வியப்பில் ஆழ்த்தக்கூடியவை. விடுதலைப்புலி பெண் போராளிகளின் ஆற்றலையும், திறமையையும் கண்டு அவர்களுடன் போரிட்ட இந்திய இராணுவத்தினரும் பெரும் ஆச்சரியமடைந்தனர். இந் நிலையானது தமிழீழப் பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதில் எவ்வளவு உறுதியோடும், முனைப்போடும் உள்ளனர் என்பதையும், அதற்கு விடுதலைப் புலிகளின் தலைமை எந்தளவிற்கு வழிசமைத்துள்ளது என்பதையுமே அது காட்டுவதாக அமைந்துள்ளது.

இதே வேளை, தேசிய விடுதலைப் போரில் தமது ஆற்றலை வெளிப்படுத்தி வரும் தமிழீழப் பெண்கள், தமது இனத்திற்குள் தமக்கிழைக்கப்பட்டிருக்கும் சமூக அநீதிகளுக்கெதிராகவும் போர் ஒன்றை நடத்தி வருகின்றனர். சமத்துவமான ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பெரு முயற்சி ஒன்றிலும் ஈடுபட்டுள்ளனர். இதில் அவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள்.

அதாவது, தமிழீழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு என்பது ஆண் ஆதிக்கத்தினையும், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளையும் எதிர்க்கும் ஆற்றலை வழங்கியுள்ளதோடு, தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய சக்தி படைத்தவர்களாகவும் மாற்றியுள்ளது. இது பெண்களுக்கென ஒரு முழுமையான சம அந்தஸ்த்தை இன்னும் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும், பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் பாரிய அநீதிகளை தடுத்து நிறுத்தவும், தட்டிக் கேட்கவும் ஒரு பெரும் சக்தி ஒன்று தமிழீழத்தில் உருவாகியுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. இதனைத் தென்னாசியாவிலேயே தமிழீழம் தான் முதலில் பெற்றுள்ளது என்பதும் பெருமைக்குரியதாகும்.

இவ் வளர்ச்சியும், எழுச்சியும், தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளது போன்று, ஒப்பில்லாத ஒரு தனிச்சரித்திரமாகும். ஆனால் தமிழீழத்தில் இடம்பெறும் இவ்வளர்ச்சி தனியாக தமிழினத்திற்கு மட்டுமல்ல, உலகில் அடக்கப்பட்டுள்ள சகல பெண்களுக்கும் குறிப்பாக தென் ஆசியப் பிராந்தியத்திற்குமே ஒரு முன்னுதாரணமாகும். ■

# அன்னை பூபதி ஐந்தாவது ஆண்டு நினைவு

தமிழீழமெங்கும் அன்னை பூபதி அவர்களின் ஐந்தாவது நினைவாஞ்சலி சிறப்பாக இடம் பெற்றுள்ளது. உண்ணாவிரதம் அன்னையின் திருவுருவப்பட அஞ்சலி என்பன எங்கும் பரவலாக இடம்பெற்றுள்ளது. மஞ்சள் சிவப்பு வர்ணக்கொடிகள் பறக்கவிட்டும் மகர தோரணங்கள் கட்டியும் அன்னையின் திருவுருவை அலங்கரித்தும் மக்கள் தமது இதயாஞ்சலியை செலுத்தியுள்ளனர். இதற்கிடை அன்னை நினைவு வாரத்தில் நடை பெற்ற பல கருத்தரங்குகளிலும் மக்கள் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு செய்த, செய்துவரும் இடையூறுகளை நினைவு கூர்ந்ததுடன் இந்நிலையில் இருந்து இந்தியா மாறவேண்டுமெனவும் கருத்து வெளியுட்டுள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவரின் வழிகாட்டலினால் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்

## ■ தமிழீழப் பெண்கள் குறித்து ஜெயா

இன்றைய உலகிலே வாழுகின்ற மக்கள் மத்தியிலே குறிப்பாக பெண்கள் மத்தியிலே தமிழீழப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால் இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தினுடைய எங்களின் தேசியத் தலைவர், எங்களுடைய தாயகத் தலைவர், எம்மின மக்களின் தலைவர் திரு. வே. பிரபாகரனுடைய வழிநடத்தலும், வழிகாட்டலுமே என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூர வேண்டும். இவ்வாறு அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ஜெயா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இன்று இந்த மண்ணிலே நாங்கள் சுதந்திரமாக நடமாடுகின்றோம் என்றால், பெண்கண் சமத்துவமாகவும் தங்களுடைய கௌரவத்துடனும் வாழ வழி அமைக்கப்பட்டிருக்கின்றது என்றால் அது எங்கள் தலைவரின் வழிகாட்டலினாலேயே என்பது எமது நெஞ்சங்களில் ஆழப்பதித்துக் கொள்ள வேண்டும்.

காட்டிலும் மேட்டிலும் நின்று கண்விழித்திருந்து களமாடி நிற்கின்ற வீரமும், தியாகமும் இங்கே தமிழீழப் பெண்களுக்கு நிறைய வந்திருக்கிறது. இந்த மண்ணிலே வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணும் தங்களின் உள்ளத்திலே இந்த வீரத்தையும், தியாகத்தையும் வளர்ப்பதற்கான ஒரு பெரிய தளம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இன்று பெண்கள் மத்தியிலே தலைதூக்கியிருக்கின்ற சீதனப்பிரச்சனை, வேலை வாய்ப்புப் பிரச்சனை அதனால் ஏற்படுகின்ற சம்பள வேறுபாட்டுப் பிரச்சனை என்பன இன்று நாம் எதிர் நோக்குகின்ற மிகப் பெரிய பிரச்சனை



களாக, பெண்களைப் பாதிக்கின்ற பிரச்சனைகளாக இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, இன்று பெண்களுக்கு ஏற்படுகின்ற பாலியல் துன்புறுத்தல் என்பதும், பாலியல் தொந்தரவுகள் என்பதும் பெண்களை மனிதப் பிறவிகளாக மதிக்கின்ற அந்த உயர்நிலையை இங்கே தாழ்த்தி விட்டுள்ளன. இவை எல்லாம் எமது மண்ணிலே இருந்து அறவே ஒழிய வேண்டுமாயின் நாம் இணைந்து போராட முன்வர வேண்டும்.

இன்றைய அனைத்துலகப் பெண்கள் நாளிலே நாம் அனைவரும் ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்வோம். இந்த மண்ணிலே இருக்கின்ற பேதங்கள் மறைய வேண்டும். பெண் சமத்துவம் நிலவ வேண்டும். எந்த இடத்திலும் பெண்களுக்கு எதிராகக் காட்டப்படுகின்ற பாரபட்சங்களை அறவே ஒழிப்போம். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

இந்த வருடத்தைய எமது பிரகடனமாக எதிர்காலத்திலே எமது வேலைத் திட்டமாக இதை நாம் எடுத்துக் கொள்வோம். இதற்கு அனைத்துத் தமிழீழ மக்களும் ஒன்றிணைந்து எழுச்சியுடன் இணைந்து போராட முன்வர வேண்டும் என்றார். ■

# மக்கள் கவனத்தை கவர்ந்த ஊர்திகள்

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளையும், ஆணாதிக்கத்தினால் உடல் உள ரீதியாகப் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் தத்துரூபமாக சித்தரிக்கும் வகையில் அமைந்த ஊர்திகள் யாழ் நகரில் அண்மையில் நடந்த பேரணியில் மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

கூட்டுறவுச் சங்கங்கள், வட்டவைப் பிரிவுகள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள் போன்றவற்றின் சார்பில் ஊர்திகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

சமூகத்தில் பெண்கள் இம்சிக்கப்படும் சம்பவங்களை -வடிவமைக்கப்பட்ட டிராக்ரர்களிலும், மாட்டு வண்டில்களிலும் வந்த ஆண்களும் யுவதிகளும் பாவனை செய்து காட்டினர்.

வறுமை, பட்டினி, சீதனக் கொடுமை, ஆண் அடக்குமுறை போன்ற நிகழ்வுகளை விளக்கும் ஊர்திகளும் பேரணியில் காணப்பட்டன.

தென்மராட்சிப் பகுதிகளில் இருந்தே பெரும் எண்ணிக்கையான ஊர்திகள் பேரணியில் கலந்து கொண்டன.

பேரணியில் பங்கு பற்றிய ஊர்திகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற ஊர்திகளுக்கு இறுதியில் நடந்த எழுச்சிக் கூட்டத்தில் வைத்து பரிசில்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கல்வயல் கிராமத்தவர்களின் ஊர்தி முதலாம் இடத்தையும் -

நாவற்குழி பாரதி ச. ச. நிலையத்தின் ஊர்தி இரண்டாம் இடத்தையும் -

நாவற்குழி குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த ஊர்தி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

மகளிர் படையணி விசேட தளபதி செல்வி ஜெயா பரிசில்களை வழங்கினார். ■

# போராட்டத்தின் மூலம் புதிய சமுதாயம் உருவாகும்

## ■ கரிகாலன் உரை

பெண்கள் மட்டும் போராடி பெண்விடுதலையை இந்தச் சமூகத்திலிருந்து ஏற்படுத்திவிட முடியாது. ஆண்களும் பெண் விடுதலைக்காக ஒத்துழைக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இவ்வாறு தமிழீழ உதவி அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அனைத்துலக பெண்கள் தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது: இன்றும் ஒரு மிகப் பெரும் பெண் ஒடுக்கு முறையாக சீதனப் பிரச்சனை இருந்து வருகின்றது. அதற்காகவே பல ஆண்கள் வெளிநாடு செல்கின்றனர். தமது சகோதரிகளை சீதனப் பேய்களிடம் இருந்து விடுவிப்பதற்காகவுமே இவர்கள் வெளிநாடுகளில் பணம் தேடும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இன்று, உலகளாவிய ரீதியிலே தமிழீழப் பெண்கள் என்றால் அஞ்சி, நடுங்கி, ஒடுங்கி நடப்பவர்கள் என்ற நிலையை விடுதலைப் புலிகள் போக்கியுள்ளார்கள்.

அந்த நிலையைப் பயன்படுத்தி பெண்கள், பெண் சமூகம் இந்தப் பெண் விடுதலைக்கு அணிதிரள வேண்டும். இந்தப் போராட்டத்தின் மூலம் ஒரு புதிய சமுதாயம் உருவாகப் போகின்றது. இதிலே ஆண் போராளிகள் போராடுகின்றனர். ஆண் போராளிகளுக்குச் சமமாக பெண்போராளிகள் நின்று போராடுகின்றார்கள். எமது இனத்திற்கு எதிரான சக்திகளுக்கு எதிராகப் போராடுகின்ற ஒரே அமைப்பின் கீழ் ஆண், பெண் போராளிகள் போராடும் இவ்வேளையில் ஒரு பெண் விடுதலைக்கான அத்திவாரம் அங்கு இடப்படுகின்றது. அந்த அத்திவாரத்தின் பயனாக அந்த நாடு விடுவிக்கப்படுகின்ற பொழுது அங்கே பெண்களும் விடுவிக்கப்படுகின்றார்கள். ஒரு சமத்துவமான பெண் விடுதலை கொண்ட ஒரு சமுதாயம் அங்கே உருவாகப் போகின்றது. இந்த நாடு விடுதலை பெறும்வரை பெண்கள் நிச்சயம் விடிவு பெறமுடியாது என்பதை அனைவரும் உணரவேண்டும்.

இன்று, தென்தமிழீழத்தில் பல சகோதரிகள் பலர் பாலியல் வன்முறைக்கு உட்படுகின்றனர். தேசவிரோத சக்திகள் விருப்பத்திற்கு மாறான பலாத்காரங்களைப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தச் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் தென்தமிழீழப் பெண்கள் அவலம் தோய்ந்த வாழ்க்கையை வாழ்கின்றனர் என்றார். ■

# கற்பூரப் பொதிக்குள் சக்திவாய்ந்த குண்டு

## ■ நாசகாரரரின் சதி அம்பலம்

கற்பூரத்துண்டுகளால் மிகவும் நுட்பமாகப் பொதிசெய்யப்பட்ட அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றை வட்டக்கச்சியில் வைத்து விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையினர் கண்டுபிடித்தனர். யாழ்ப்பாண குடாநாட்டில் பொது மக்களுக்கு பெரும் உயிர்ச்சேதத்தை விளைவிக்கும் நோக்குடன் இவ்வெடிகுண்டு நாசகாரர்களால் கொண்டுவரப்பட்டது. இவ்வெடிகுண்டைக் கொண்டுவந்த துத்திதாரியர் இருவர் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

கற்பூரத் துண்டுகளுடன் சி-4 ரக வெடிமருந்துகள் சேர்ந்ததாக, மிகவும் சாதுரியமான முறையில் பொதி செய்யப்பட்ட அதி உயர் சக்தி வாய்ந்த இவ்வெடிகுண்டு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினரால், துவிச்சக்கர வண்டிகள் வாடகைக்கு வழங்கப்படும் வீடோன்றில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வெடிகுண்டு பொது மக்களுக்கு பெரும் உயிர்ச் சேதத்தை விளைவிக்கக் கூடியது என்றும், குடா நாட்டில் பொது இடங்களில் வைத்து பெரும் உயிர்நாசத்தை ஏற்படுத்தும் நோக்கில் நாசகார சக்திகளால் இங்கு கொண்டு வரப்பட்டதென்றும் புலனாய்வுத்துறையினர் கூறினர். வவுனியா மூலம் இவ்வெடி குண்டைக் கொண்டு வந்த இருவர் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு மேல் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடத்திலும் நாசகார சக்திகள் அப்பாவிப் பொதுமக்கள் மீது வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியமையும், வேறு சில தாக்குதல்களை நடத்த முற்பட்டமையும் தெரிந்ததே. கடந்த வருடம் சித்திரை மாதம் 23ஆம் திகதி கொம்படியில் நாசகார சக்திகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் பத்துக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதும், பதினைந்து பேர் வரையில் காயமடைந்ததும் தெரிந்ததே. மேலும், கடந்த வருடம் ஐப்பசி மாதத்தில் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்ட நாசகார நடவடிக்கையொன்று தேசப்பற்றுமிக்க வியாபாரிகள் இருவர், விடுதலைப்புலிகளின் புலனாய்வுத் துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கியமையால் அம்பலமானதும் தமிழ் மக்கள் அறிந்ததே. ■

# காவலரண்களில் தமிழ்க்குழுகள்

மன்னார் தீவிலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டில் இயங்கும் தாழ்வுப்பாடு, பள்ளிமுனை, சாவற்காடு, சவக்காலைச் சந்தி ஆகிய இடங்களில் இராணுவக் காவலரண்களில் தமிழ்க்குழுக்களும் தமிழ்ப் பொலிசாரும் கடமையிலீடுபட்டு வருவதாக மன்னாரிலிருந்து வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினருக்கு உதவியாகவே இந்த தமிழ்க்குழுக்களின் உறுப்பினர்களும் பொலிசாரும் செயலாற்றி வருகின்றனராம். ■

# நெல்மூடை எடுத்துச் செல்ல மட்டக்களப்பு இராணுவம் கெடுபிடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல்லை ஓரிடத்தில் இருந்து இன்னுமோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இராணுவம் புதிய தடையுத்தரவை விடுத்துள்ளது.

இது பற்றி தெரியவருவதாவது, சம்பந்தப்பட்ட பிரதேச இராணுவ அதிகாரியின் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றே நெல்லைக் கொண்டு செல்ல வேண்டுமென்றும், அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அறுவடை செய்த காணியின் உறுதி சமர்ப்பிக்கப் பட வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீதித்தடையை மேற்கொள்ளும் வான்படையினர் நகருக்குள் கொண்டுவரப்படும் நெல்மூடை ஒவ்வொன்றிற்கும் தலா மூன்று ரூபாவீதம் அறவிடப்படுவதாகவும், அறுவடை காலமாகையால் பெருமளவு பணம் வதுலாகின்றது என்றும் தெரியவருகின்றது. ■

# மன்னார் மாவட்டத்தில் மாவீரர் அஞ்சலி நிகழ்வு

1985 தொடக்கம் இது வரை காலமும் பங்குனி மாதத்தில் வீரச்சாவடைந்த மன்னார் மாவட்ட மாவீரர்களை நினைவு கூருமுகமாக கற்கடந்தகுளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்ச்சிகளும், நினைவு கூரல் கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காலை 7 மணிக்கு மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.-கனேஸ் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விளையாட்டுக்களை ஆரம்பித்து வைத்தார். சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், உதைப்பந்தாட்டம், வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதனை தொடர்ந்து மாலை 7.30 மணியளவில் அனைத்து மக்களும் கற்கடந்த குளம் வீதியில் இருந்து மைதானத்தில் அமைக்கப்பட்ட கலையரங்கு வரை அணிவகுத்து நிற்க, முருங்கன் பாடசாலை மாணவியரின் பாண்ட் வாத்திய இசையுடன் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் மைதானத்திற்குள் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் மாவட்டத் தளபதி திரு அமுதன் அவர்கள் மங்கள விளக்கை ஏற்றி வைக்க மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர்களின் படங்களுக்கு சுடரை ஏற்றி மலர் அஞ்சலி செய்தனர்.

தொடர்ந்து நினைவுக் கூட்டம் ஆரம்பமானது. நானாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திரு. திலகன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கோ. கனேஸ் அவர்களின் உரையில், "இந்த நாள் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். 1991ஆம் ஆண்டு இதே நாளில் சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதலில் முப்படைத் தாக்குதல்களுக்கும் ஈடுகொடுத்த பல போராளிகளை இழந்த நாள்" எனவும், ஒவ்வொரு போராளிகளினதும் மன உணர்வுகளையும் விரிவாக எடுத்துக் கூறினார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல தடவை நிர்வாணமாக்கி சித்திரவதை புரிந்தனர்

## ■ பலாலி முகாமில் இருந்து விடுபட்டவர் தகவல்

பலாலி இராணுவ முகாமில் வைத்து முதல் ஒன்பது மாதங்கள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டேன். அக்குறித்த காலத்தில் ஆறு தினங்கள் எனது உடலில் ஆடைகள் இன்றி நிர்வாணமாக்கி பலதரப்பட்ட சித்திரவதைகளை இராணுவத்தினர் என்மீது மேற்கொண்டனர்.

இவ்வாறு, பலாலி இராணுவ முகாமில் இருபத்தைந்து மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த குடும்பஸ்தரான மகாலிங்கம் லட்சுமிகாந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நானும் இரண்டு நண்பர்களுமாக 22. 2. 91 இல் இந்தியாவில் இருந்து வந்துகொண்டிருந்த வேளையில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பலாலி முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டோம். அங்கே விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் குணசேகரம் என்பவர் மேல் விசாரணைக்காக களுத்துறைக்கு அனுப்பப்பட்டார். மற்றையவரின் நிலை விடுவிக்கப்படும்வரை அவர் பற்றிய தகவல்கள் எதுவும் தெரியவில்லை.

நான் கைது செய்யப்பட்டு முதல் வருடகாலப் பகுதியில் தாக்குதல்களுக்கு மேல் தாக்குதல்களும், சித்திரவதைகளுக்கு மேல் சித்திரவதைகளையும் தாங்க முடியாத அளவில் இடம்பெற்றன. எனது உடலில் இராணுவத்தினரின் தாக்குதல் படாத உறுப்புக்கள் எதுவும் இல்லை. இராணுவக் கெடுபிடியான காலங்களில் எமக்கு பசியாற உணவு தரப்படுவதில்லை. நாளொன்றுக்கு ஒரு கப் சோறு மட்டுமே கிடைக்கும். பசி எடுக்கும் நேரங்களில் தண்ணீர் குடிப்பதானாலும் இராணுவத்தினரிடம் அனுமதி பெறவேண்டும்.

கைது செய்யப்பட்டு ஒரு வருட காலத்திற்குப் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எம்மைப் பொறுப்பேற்ற பின்னரே எமக்கு பசியாற உணவும், உடையும், கடிதத் தொடர்பும் கிடைத்தபோது இராணுவத் தாக்குதலும் குறைந்தது. தமிழர்களை சித்திரவதை செய்து இம்சித்து அடிமையாக வைத்திருப்பது ஒருவகையான இன்பம் என்றார்.

இளவாலைப் பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்ட புற்றுநோயாளியான திருமதி செல்லம்மா மார்க்கண்டு (வயது 46) தெரிவிக்கும்போது, இளவாலையில் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தவேளை எனது கணவனும், மகனும் யாழ்ப்பாணம் சென்றிருந்தனர். கடந்த நான்கு மாதங்களாக குடும்பத்தவர்களின் உதவிகள் இல்லாமல் புற்றுநோயினால் பெரிதும் அவஸ்தைப்பட்டேன்.

எனக்கு ஏற்பட்டிருக்கும் நோயைக் குணப்படுத்துவதற்கு யாழ்ப்பாணம் செல்ல நான் பல தடவை அனுமதி கேட்டும் தர மறுத்ததாலேயே இந்நோய் மேலும் தீவிரமாயிற்று. இந்நோய்க்குரிய மருந்து வகைகள் கிடைக்காததால் எனது கண்பார்வையும் மறையும் நிலை ஏற்பட்டது.

நான் மட்டுமல்ல, அளவெட்டி, பன்னாலை, மாதகல் பகுதியில் தங்கியிருப்போர் அனைவரும் பல்வேறு வகையிலான நோயாளிகளாக மாறி வருகின்றனர். மிகுதியானோரும் விரைவில் வந்து சேராவிடில் நோயினால் இறக்க நேரிடும் என்றார்.

இராணுவத்தினரின் தொந்தரவுகள் உங்களுக்கு ஏற்படுவதுண்டா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு அதை எப்படிக் கூறுவது என்று வாயைப் பொத்திக் கொண்டார். ■

# தமிழ் மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்கும் நிலை

சிங்கள அரசின் இனவாத போராட்டக் கொள்கை காரணமாகவும், மனிதாபிமானமற்ற போர் முறைகள் காரணமாகவும் யாழ் மாவட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் மரநிழல்களிலும், வெறுந்தரையிலும் இருந்து கல்வி கற்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இவ்வாறு கஸ்டமான நிலையில் யாழ் மாவட்டத்தில் கல்வி கற்றுவருவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்களின் தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

யாழ் - மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள தீவுப்பகுதி, வலிகாமம் மேற்கு -வடக்கு ஆகிய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்பதால் இந்த நிலை மேலும் அதிகரித்துள்ளது. ■

# அம்மா ஆஸ்பத்திரி சென்றபோது இராணுவம் எம்மைப்பிடித்தது

## ■ விடுவிக்கப்பட்ட சிறுமி தெரிவிப்பு.

"அம்மாவின் பிரசவத்திற்காக எங்களை வீட்டில் நிறுத்தி விட்டு யாழ். வைத்தியசாலைக்கு அப்பா கூட்டிச் சென்றார். அவ்வேளையில் திடீரென அங்கு சுற்றிவளைத்த சிறீலங்கா ராணுவம் எம்மைக் கைது செய்தது".

இவ்வாறு கடந்த 7 மாதங்களாக மாதகல் பகுதியில் தனது பேத்தியுடன் வசித்து விட்டு, அங்கிருந்து விடுதலையாகி குமாரி கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தவர்களில், ஒரு சிறுமியான குகந்தினி சிவபாலன் [வயது பத்து] பத்திரிகை நிருபருக்கு தகவல் தருகையில் தெரிவித்தார்.

அச்சிறுமி சோகமே உருவாக அங்கு தனது 2 வயது நிரம்பிய சகோதரியுடன் வந்த வேளை, நிருபருக்கு மேலும் பேட்டி தருகையில் :-

எமது வீட்டைச் சுற்றிவளைத்த இராணுவம், எம்மை விசாரணை செய்தனர். எனது தந்தையின் தாயாரும் எங்களுடனேயே இருந்தார்.

எனது சகோதரி அம்மாவையும், அப்பாவையும் நினைத்து இரவு பகலாக அழுதவண்ணம் இருந்தார். இவ்விடயத்தை அப்பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியிடம் பல தடவை அழுது கூறினேன். இவ்வளவு காலமும் தடுத்துவைக்கப்பட்ட பின் நாம் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் இங்கு வந்து சேர்ந்தோம் என்று கூறினார்.

பருத்தித்துறையை வந்தடைந்த இவர்களை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி ஒருவர் தனது கரங்களினால் கட்டி அணைத்து வந்து, தேநீர் உட்பட பல சிற்றுண்டிகளையும் வழங்கியதைக் காணமுடிந்தது. ■

# விடுதலையான பலருக்கு சித்தப்பிரமை

இளவாலை, அளவெட்டிப் பகுதிகளில் படையினரிடம் சிக்குண்டு பின்னர் கடந்த மாதம் விடுதலையானவர்களில் பலர் சித்தப்பிரமை பிடித்தவர்களாகக் காணப்பட்டனர் என்று தெரிய வருகிறது. இளைஞர்கள் பலரே சித்தப்பிரமை பிடித்து கண்டபடி பிதற்றிக் கொண்டிருந்தனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் பெண்களும், வயதானவர்களும், மாணவிகளும் அடங்குவர். இவர்களில் பலர் வெங்காயம், வெற்றிலை, அரிசி, பருப்பு, மண்எண்ணெய் ஆகியவற்றை தம்முடன் எடுத்துவந்திருந்தனர். சிலர் சைக்கிள்களையும் கொண்டுவந்தனர். ■

# லவனிதா குடியிருப்பில் கௌபி, வற்றாளை செய்கை

தீவக பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீட்டுத் தோட்ட திட்டத்தின் கீழ் நாவற்குழி லவனிதா குடியிருப்பு மக்களால் செய்கை பண்ணப்பட்ட கௌபி, சீனிவற்றாளை போன்ற பயிர்கள் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளதாக தெரிய வருகிறது. அரிசி, மா போன்ற உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் அன்றாட உணவுத் தேவையை இவை பூர்த்தி செய்து வருகின்றன எனவும் அறியப்படுகிறது. ■

### சிலாவத்துறையில் வீரச்சாவடைந்த

# 82 மாவீரர்களுக்கு நாவற்குழியில் அஞ்சலி

சிலாவத்துறை சிறீலங்கா இராணுவமுகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த எண்பத்திரண்டு மாவீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் நாவற்குழியில் அனுட்டிக்கப்பட்டது.

மேற்படி மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட சரணாலயத்திற்கு அருகே மாலை 5. 30 மணிக்கு வீரவணக்கக்கூட்டம் இடம்பெற்றது. இதில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்த தமிழீழ அரசியற்துறைப் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் மாவீரர்களின் பெற்றோர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

ஈகைச் சுடர்களை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, மாவீரர் பணிமனைளப் பொறுப்பாள்ர் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. தமிழன்பன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி. -மாலினி, சாவகச்சேரி வட்டவைப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். ■

### அரசாங்க ஊழியர்களின் கட்சி குறித்து விசாரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றி விபரம் சேகரிக்கப்பட்டு வருகின்றது. இத்தகைய விபரங்கள் ஏன் சேகரிக்கப்படுகின்றன என்பது புரியாத புதிராக இருப்பதாகவும், இதனால் ஊழியர்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் கூறப்படுகிறது. ■

# வறுமையின் கோரப்பிடியில் ஈச்சம்பலத்தைத் தமிழர்கள்

ஈச்சம்பலத்தை கிராமத்தில் வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் இருப்பிட வசதியின்றியும் அல்லல்படும் ஓர் அவல நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதியில் இருக்கும் ஈச்சிலம்பலத்தை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் பத்தொன்பது தமிழ் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 7,000 தமிழர்கள் வாழ்கின்றனர். மேலும் இலங்கைத்துறை, கறுக்காமுனை, புன்னையடி, வாழைத் தோட்டம், வெருகல், முகத்துவாரம் முதலான கிராமங்களில் மிகவும் வறிய நிலையில் பழங்குடியினரான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். மூதூர் பிரதான நகரில் இருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் அமைந்துள்ள இவ்வுதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டக்களப்பில் இருந்து சுமார் நாற்பத்தெட்டு மைல் தொலைவுடையதாகும்.

இயல்பாக வெள்ளத்தாலும் வரட்சியாலும் அடிக்கடி மாறி மாறிப் பாதிப்புறும் இந்தப் பிரதேசத்தில் மகாவலி ஆற்றின் பெருக்கெடுப்பின் காரணமாகவும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

சுமார் பதினெட்டாயிரம் ஏக்கர் நெற்செய்கைப் பரப்பைக் கொண்ட இப்பிரதேசம் இன்று இராணுவத்தின் அடாவடித்தனங்கள், மற்றும் வறுமைநிலை, உழவு இயந்திர வசதியின்மை, விதை நெல், உரவகை கிருமி நாசினி போன்றவற்றின் இன்மைகள் என்பவற்றால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது.

சாதாரணமாக மகாவலி ஆற்றின் ஓரக்கரையில் மேட்டு நில விவசாயத்தில் ஈடுபட்டு வந்த இப்பகுதி மக்களின் நீரிறைப்பு இயந்திரங்கள் வன்செயல் கலவரங்களின்போது அபகரிக்கப்பட்டமையால் அந்த விவசாய முயற்சியும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், மீனவர்களின் வலைகள், வள்ளங்கள் சேதமாக்கப்பட்டமையாலும் இராணுவக் கெடுபிடிகள் காரணமாகவும் மீன்பிடித் தொழிலில் கூட ஈடுபட முடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

ஈச்சிலம்பலத்தை கிராமத்தில் அமைந்திருந்த ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலை செயலிழந்துபோயுள்ளமையினால் இப்பிரதேச மக்கள் வைத்திய சிகிச்சை பெறுவதில் அனுபவிக்கும் சிரமங்களோ சொல்லும்தரமன்று. உடனுக்குடன் சிகிச்சை பெறமுடியாமல் கர்ப்பிணிப் பெண்களும் கடுமையான நோயாளிகளும் பெரும் அவல நிலைக்கு உள்ளாகி வருவதுடன் இக்காரணத்தினால் பலர் மரணத்தையும் தழுவிக் கொண்டுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு - வெருகல் பஸ் சேவையும், மூதூர் -வெருகல் பஸ் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்து என்பது பெரும் பிரச்சினையாகியுள்ளது. பல மைல் தூரத்தை நடந்துதான் கடக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் ஒன்பது கிராமங்களில் பாடசாலைக் கட்டிடங்கள் இருந்தபோதும் தளபாடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையினாலும் கட்டிடங்கள் சேதமுற்றுள்ளமையி இப்பகுதியில் ஒன்பது கிராமங்களில் பாடசாலைக் கட்டிடங்கள் இருந்தபோதும் தளபாடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையினாலும் கட்டிடங்கள் சேதமுற்றுள்ளமையினாலும் நிலத்தில் இருந்துதான் கல்வி கற்க வேண்டிய நிலையில் மாணவர்கள் உள்ளனர்.

இதுதவிர வன்செயல் பாதிப் காரணமாக அரசு வழங்குவத கக் கூறும் நிவாரணம் எதுவும் கூட இப்பகுதியை எட்டவில்லை. சேதம் அடைந்த வீடுகளைத் திருத்துவதற்கு கூட நிவாரணம் வழங்கப்படவில்லை. இதே நிலையில் இப்பகுதியில் வாழும் மக்கள் அனுபவிக்கும் துன்பமும் துயரமும் வர்ணிக்க வார்த்தைகள் இல்லே என்றே கூறலாம்.

மேலும், அரசாங்கத்தினால் ஏனைய பகுதிகளில் அமுலாக்கப்படும் வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டமுமான ஜனசவிய திட்டம் கூட இங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் இங்குள்ள கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களும் கிராமங்களை விட்டு வெளியிடங்களுக்குத் தொழிலுக்காக சென்றுவர முடியாத கட்டுப்பாடும் இப்பிரதேச மக்களை வறுமைக்குள் தள்ளி விட்டுள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலைவர் பிரபாகரனுக்கு தொண்டா விடும் தூது

சிறீலங்காவின் அரசியல் வானில் நிரந்தர இரட்டை வேட நட்சத்திரமாக இன்றுவரை திகழ்பவர் தொண்டமான் ஒருவர்தான். அமைச்சராக -அதே சமயம் தொழில் சங்கத் தலைவராக -பேரினவாத அரசின் பிரதிநிதியாக -அதேசமயம் தமிழரின் பாதுகாவலனாக -சமகால முரண்பட்ட பாத்திரங்களில் அவர் தோற்றமளித்தார். இது அவரது அரசியல் வித்தகமா? அல்லது அரசியல் நயவஞ்சகமா? இதுபற்றி அவரிடமே கேட்டால், அதிலென்ன தவறு என்பார். இவ் அரசியல் மனோபலம் கருதியே இற்றைவரை அவரது அரசியல் எதிர்காலம் குறித்து எவரும் வினா எழுப்பவில்லை. ஆனால் இன்று தொண்டமானின் பின் யார் என்ற கேள்வி எழத் தொடங்கிவிட்டது. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. கடுமையான நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அவருக்கு வயது 80 ஆகின்றது. இவ்வுலகில் எவ்ரும் நிரந்தரம் இல்லையென்பது அவருக்கோ, அவரது நண்பர்களுக்கோ அல்லது எதிரிகளுக்கோ தெரியாத விடயமாக இராது. அத்தோடு இன்று அவரது மலையக தேயிலைத் தோட்ட சாம்ராஜ்யமும் முன்னர் போல் வலுவாக இல்லை. பல ஊடுருவல்கள் அங்கே நடந்து முடிந்துவிட்டன. எல்லா அரசியல் தலைவர்களைப் போலவே மாற்றாரிடம் தனது இ.தொ.க. ஆதிக்கம் பறிபோவதை தொண்டா விரும்பவில்லையென்பது செல்லச்சாமி ஓரங்கட்டப்பட்டதிலிருந்து புரிகிறது. இப்போது தனது பேரனை தனக்குப் பின் தலைவராக்க முனைகிறார் என்பதே அண்மையில் அவரிடமிருந்து விலகியோர் வைக்கும் முதல் குற்றச்சாட்டு. விலகியோரில் முக்கியமானவர் இராமையா. இவர் தனது பகிரங்க கடிதத்தில் "சர்வாதிகாரப் போக்கினைக் கடைப்பிடித்தல்", "குடும்ப ஆதிக்கத்தைப் பேணல்", "மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டிவிட்டு சக்கையானபின் தூக்கி வீசல்" என்ற பாரிய குற்றச் சாட்டுக்களை முன் வைத்துள்ளார். இனி இ.தொ.க. அழிந்துபடும் என்று அவர் கூறுவது மிகையானதாக இருந்தாலும் அதில் அர்த்தம் பொதிந்திருப்பதாகக் கருதவேண்டியுள்ளது.

எனவே, இத்தகைய பின்னணியிலேயே கடந்த வருட முற்பகுதியிலிருந்து தமிழீழத் தேசியப் பிரச்சனையில் தொண்டா காட்டும் ஆர்வத்தைக் கவனிக்க வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய மடலில் "உலகம் வியக்கும் சரித்திரத்தை தமிழர் படைத்தே தீருவார்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. நல்லதோர் வருங்காலத்தை நோக்கி இக்கடிதத்தை அனுப்புகின்றேன்" என்றார். இம்மடல் தொண்டமானின் பெரும் அரசியல் நடவடிக்கை ஒன்றின் வெளிப்பாடாகும். காலத்திற்குக் காலம் தொண்டாவின் அரசியல் வாழ்வில் புயல்கள் வீசியபோது அவர் அவற்றினை கையாளப் பயன்படுத்திய அவரது அணுகுமுறைகளை அறிவதன்மூலமே தற்போதைய தொண்டாவின் அரசியல் நகர்வினை அறிதல் முடியும்.

இற்றைவரை தனது அரசியல் தொழிற்சங்க தலைமையைத் தக்கவைக்க இவர் கையாண்ட அணுகுமுறைகளை (அவரது துருப்புச்சீட்டுக்களை) முடிந்தளவு பின்வருமாறு வகைப்படுத்தலாம்; பாரிய தொழிற்சங்கம் ஒன்றினை (ஒரு கட்டத்தில் 6 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர் கொண்டிருந்த) தனது பிடியிலிருந்து வழுவாது வைத்திருத்தலோடு அதனை மலையக மக்களின் ஒரே தேசிய இயக்கம் என்று பாவனைப்படுத்தியமை; இந்திய அரசுகளோடு தொடர்புகளைப் பேணி தனக்கும் இந்தியப் பலம் பின்னால் இருப்பதான தோற்றத்தைக் கொடுத்தமை; மூன்றாவதாக அவரது தமிழீழ தமிழர் குறித்தான அக்கறை பற்றிய பிரதிமை. முதலிரண்டையும் பயன்படுத்தி மலையகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியிலும் தனது நிலையை உறுதிப்படுத்தினார். மூன்றாவதை ஐக்கிய தேசியக் கட்சி பதவி அற்ற நிலையில் சுதந்திரக் கட்சி மூலம் வரும் எதிர்ப்புக்களை சமாளிக்கும் கவசமாகவும், **தமிழர் அமைப்புக்கள் மலையகத்தினுள் உட்புகுந்து பலம் பெறுவதைத் துடுக்கும் வேலியாகவும் பயன்படுத்தினார்.** அவரது முதலாவது அணுகுமுறை இன்று மிகவும் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. அவரிடமிருந்து பிரிந்தோர் அவர் மலையகத் தொழிலாளர் சக்தியை தனது சுயநலத்திற்கு பயன்படுத்தியமை, தொழிலாளர்



உரிமைப் போராட்டங்களை மழுங்கடித்தமை, எதையும் முதலில் கடுமையாக எதிர்ப்பதுபோல் பாவனை காட்டி இறுதியில் பின்வாங்குகின்றமை. (சிறீமா-சாஸ்த்திரி உடன்படிக்கையை முதலில் கடுமையாக எதிர்த்தமை. பின் எதிர்ப்போர் சொத்துக்கள் பறிமுதலாகும் என சட்டம் வர, போராட்டத்தினைக் கைவிட்டமை இதற்கொரு உதாரணமாகக் காட்டப்படுகிறது.) இன்று தனது நலனுக்காக மலையகத் தொழிலாளர் சக்தியைச் சிதறடித்து மலையகத்தை படிப்படியாக ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குப் பெட்டியாக தாரை வார்த்துக் கொடுத்தமை என அவரது அரசியல் எதிரிகள் இவரை வன்மையாக குற்றம் சாட்டுகின்றனர்.

இவை எவ்வாறு இருப்பினும், தொண்டமானின் தமிழர் நலன் குறித்தான அணுகுமுறை சமகால முக்கிய நிகழ்வாகின்றது. 1970 ம் ஆண்டின் பின் சுதந்திரக் கட்சி பதவிக் காலத்தில் அவர் தன்னை தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இனம் காட்டினார். 1976 ம் ஆண்டில் வட்டுக்கோட்டை மகாநாட்டில் (அவர் வராவிட்டாலும் கூட்டணித் தலைவருள் ஒருவராகத் தெரிவானார்.) ஆனால் எக்கட்டதிலும் அவர் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இது இவரது சாணக்கியத்தனமாகும். ஏனெனில் இக்கால கட்டத்தில் மலையகத்தை என்னோடு விட்டுவிடுங்கள் என விடுதலைக் கூட்டணியோடு பேசி வெற்றிகண்டார். ஏனென்றால் அப்போது தமிழரசுக் கட்சியின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் கழகம் வேகமாக மலையகத்தில் வளர்ந்து வந்தது. அவ்வளர்ச்சி இத்தோடு தடைப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிட இவர் மறுத்தார். ஆனால் 1977ஆம் ஆண்டு தேர்தலில் நுவரெலியா -மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் இவர் மூன்றாவது எம்பியாக வாவது வருவதற்கு இத்தொகுதியினரில் 6000 வடகிழக்கு தமிழரின் 18,000 வாக்குகளில் கணிசமான பங்கு இவருக்குச் (ஒருவருக்கு 3 வாக்கு) சென்றதே காரணம் ஆகும். அன்றேல் இவர் தோற்றிருப்பார். இத்தேர்தலில் கூட்டணி இவரை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது. பின்னர் தேர்தல் முடிய **தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஒருவர் அமைச்சரானார். இன்னொருவர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகும் அவலம் நேர்ந்தது.** அத்தோடு தொண்டாவின் தமிழர் மீதான அக்கறையும் அப்போதைக்கு அற்றுப் போயிற்று. இவையெல்லாம் தொண்டாவின் அரசியல் வாழ்வின் சில பக்கங்கள்.

ஆனால், இன்று முன்னைய காலங்களைப் போல் வலுவாக அவரும் இல்லை. அவரது தொழிற்சங்கமும் இல்லை. இனியும் தொடர்ந்து அவரால் அல்லது அவரது வாரிசால் மலையக மக்கள் ஒட்டுமொத்தமாக வாக்குகளை வாரிக்கொடுக்க முடியுமா என்பதே இன்றைய கேள்வி. முன்னர் எத்தனையோ பிளவுகளைச் சந்தித்தவர்தான் தொண்டா. 1956ம் ஆண்டு அஸீஸ் வெளியேறி ஜனநாயக தொழிலாளர் காங்கிரசை அமைத்தபோதும் (இவரோடு C.V. வேலுப்பிள்ளை, நடேசன், ரொசாரியோ பெர்னான்டோ போன்றோரும் வெளியேறினர்.) பின்னர் வெள்ளையன் வெளியேறி தேசிய தொழிலாளர் சங்கத்தை அமைத்தபோதும் சரி தொண்டாவை அசைக்கமுடியவில்லை.

**பாலகுமாரன்**

ஆனால் இன்று நிலை வேறு. அண்மைக்காலத்தில் இ.தொ.காவின் இளந்தலைவருள் ஒருவரான சந்திரசேகரன் விலகியபோது தொண்டாவிற்கு தலைவலி தோன்றியது. ஏனெனில் சந்திரசேகரன் வெறுமனே தொழிற்சங்க ரீதியில் மட்டுமன்றி மலையக மக்கள் தேசிய நலன் (மலையக மக்கள், தேசியம் என்பது அவரது மலையக மக்கள் முன்னணியின் கொள்கை) குறித்தும், தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்தும் சுய ஆர்வமும் அக்கறையும் மட்டுமன்றி செயற்பாடுகளையும் கொண்டிருந்தார். இவர் முன்னர் தமிழீழ அமைப்புக்கள் சிலவற்றோடு தொடர்புகளை வைத்திருந்ததாகவும், பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளோடு இவர் தொடர்புகளை வைக்க முயன்றார் என்றும் அரசியல் அரங்கில் பேசப்பட்டது. இவர் கைதானபோது (கொழும்பு ஜே.ஓ.சி. குண்டு வெடிப்பு சம்பவம்) பற்றி தொண்டா நிம்மதியடைந்திருந்தபோதும் சந்திரசேகரனை விடுதலை செய்யக்கோரி தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியது அவருக்கு பலத்த அடியாகவே விழுந்தது. இது போலவே மிக அண்மையில் வெளியேறிய இராமையா உட்பட 35 இடைநிலை இ.தொ.கா. அதிகாரிகளும் (இவர்கள் தமக்கு 15,000 உறுப்பினர்கள் ஆதரவுண்டு என்கின்றனர்.) புதிய தொழிற்சங்கம் அமைப்பதை விட்டு தொண்டாவின் அரசியல் எதிரியான காமினியோடு சேர்ந்தது தொண்டாவுக்கு உவப்பான விடயமாகாது.

இவை எல்லாவற்றையும் விட இவரைப் பயன்படுத்தி இவரது பாணியிலே பாரிய தொழிற்சங்கமொன்றை இவரது கோட்டைக்குள்ளேயே ஐ.தே.க. கட்டிமுடித்துவிட்டது. ஏனெனில் மலையக தொழிலாளியால் இவருக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடயே வேறுபாடு காண முடியவில்லை. 1977 ஆம் தேர்தலில் முதல் எம்.பி.யாக காமினிவர தொண்டா பெருமுயற்சி செய்தே மூன்றாம் எம்பியானார். அப்போது தொண்டமானின் சின்னம் சேவலுக்கு வாக்களிக்கு மாறு கோரப்பட்டபோது, தொழிலாளர்கள் சிலர் "அப்போது நம்ம சின்னம் யானை இல்லீங்களா?" என்று கேட்டுக் குழப்பினர். குழம்பிய குட்டையிலே மீன் பிடித்தது ஐ.தே.க. கட்சி. பலன் 1989 ஆம் தேர்தலில் 55,000 மலையகத் தமிழரைக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் ஒரு இ.தொ.க. உறுப்பினராவது தெரிவு செய்யப்படவில்லை. அதுபோலவே 1981 ஆம் ஆண்டில் தொண்டமான் ஐ.தே.கட்சி அரசில் சேர்ந்த பின் அவரின் தொழிற்சங்க உறுப்பினரின் தொகை குறைந்து 2 இலட்சத்து 45 ஆயிரமாகியது. அது படிப்படியாக மேலும் குறைகின்றது. இப்போது உறுப்பினர் தொகை 130,079 என அண்மையில் வெளியேறியோர் வெளிப்படுத்தியுள்ளனர். **இன்று மலையகத்தின் பெரிய தொழிற்சங்கம் காமினியால் கட்டி வளர்க்கப்பட்ட ஐ.தே.கட்சியின் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமேயாகும்.** கட்சி விலகிய காமினி இப்போது D U N F கட்சியின் மலையக தொழிற் சங்கத்தைக் கட்டி வளர்ப்பதில் முழுக் கவனமெடுத்து வருகின்றார். தொண்டாவின் பரம அரசியல் வைரி காமினியேயாவார். 1983 ஆம் ஆண்டு அவர் அமைச்சராக இருந்தபோதே தொண்டமானைப் பார்த்து "நாயுண்ணியானது நாய் மீது இருந்து கொண்டு அதன் குருதியை உறுஞ்சிக் குடித்து உயிர் வாழ்கின்றது. ஆனால் அது என்னவோ தன்னால்தான் உயிர் வாழ்கின்றது என நினைக்கின்றது. அது போலவே இ.தொ.கா." என்றவர் ஆயிற்றே. அத்தோடு பிரேமாவின் தோட்ட நிர்வாகங்களை தனியார் கம்பனிக்கு தாரைவார்க்கும் திட்டமும் தொண்டமானுக்கு (தனது தோட்ட இலாபத்தைப் பெருக்க உதவினாலும்) அவரது தொழிற்சங்கத்தை மேலும் மட்டுப்படுத்தி தொழிலாளர் உழைப்பை மிகக் கடுமையாக சுரண்டவே பயன்படும்.

இவற்றையெல்லாம் பார்க்குமிடத்து மலையகத்தில் தொண்டாவின் தொழிற்சங்க சாம்பிராட்சியம் சரிந்து வருவது தெளிவாகின்றது. சரிந்து வரும் இச் சாம்ராச்சியத்தை கட்டிக் காப்பதற்கு தமிழீழ அரசியலில் தீவிர அக்கறை காட்டிவரும் தொண்டா தலைவர் பிரபாகரனை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்த முனைகிறார்போலும். தொண்டாவின் இக்காய் நகர்த்தலை விடுதலைப்புலிகளும் மிக உன்னிப்பாகவே அவதானித்து வருகின்றார்கள். ■

## திருமலை ஆஸ்பத்திரிக்கு காலாவதியான வில்லைகள்

அநுராதபுர மாவட்ட வைத்தியசாலையில் இருந்து காலாவதியானது எனக்கூறி கொழும்புக்கு அனுப்பப்பட்ட மலேரியா வில்லைகள் திருக்கோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்ட வைத்தியசாலையில் இவ்வில்லைகளை உட்கொண்டோர் பலர் மயக்கம் அடைந்ததைத் தொடர்ந்து இவ்வில்லைகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இது சம்பந்தப்பட்ட அதிகாரி பின்னர் அவற்றை திருகோணமலைக்கு அனுப்பியதாக தெரியவருகின்றது. இங்கும் இவற்றை உட்கொண்ட பலர் மயக்கம் அடைந்ததாகவும் உடனடியாக இந்த வில்லைகளை மாற்றித் தருமாறும் திருக்கோணமலை மருத்துவ வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. ■

## யாழ் - வன்னி தந்திச் சேவையை ஆரம்பிப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாண நிலைமையைக் கருத்தில் கொண்டு யாழ் - வன்னி தொடர்புகளுக்கான தந்திச் சேவை ஒன்றை பொதுமக்களுக்காக ஆரம்பிக்க விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு எண்ணியுள்ளது.

இது தொடர்பான அபிப்பிராயங்களையும், சேவை எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றியும் ஆலோசனைகளை எழுதி தமக்கு அனுப்பும்படி விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். ■

## ஆயுதங்களுடன் தப்பி ஓடிய படையினரால் தொல்லை

இராணுவத்தில் இருந்து ஆயுதங்களுடன் தப்பியோடிய 50பேர் ஒன்றிணைந்து கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவதாக எம்பிலிப்பிட்டிய பொலிசாரால் நடத்தப்படும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இரவு வேளைகளில் திட்டமிட்டு வழிப்பறிக் கொள்ளைகள் இடம்பெற்றுவருவது தெரியவந்துள்ளது. அண்மையில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அவரை விசாரணை செய்யும்போது இராணுவத்திலிருந்து துப்பாக்கிகள், ரவைகள், வெடிகுண்டுகள் பல மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக எம்பிலிப்பிட்டிய பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்றும்...

தொண்ணூறாம் ஆண்டின் போர் தொடங்கிய பின்னாலான நாட்கள். எங்கும் வெறிச்சோடிய தெருக்கள். போரோசையைத் தவிர வேறோசை கேட்காத நேரம். இரவில் மட்டுமல்ல இருள். மக்களின் மனதிலும் அச்சமெனும் இருள். ஆழ்ந்த சிந்தனையில் ஒடுங்கி தலை தொங்கிய மக்கள். நிமிர்ந்து பார்த்தால் முகத்திலே சினப்புமில்லை. சிரிப்புமில்லை. தம்முன்னே தோன்றிய பூதாகரமான போர்ச் சூழலை எவ்வாறு புரிவது? எப்படி முகம் கொடுப்பது? எவ்வாறு இசைவாக்கம் பெறுவது? உடனே புரியவில்லை மக்களுக்கு. குண்டு வீச்சில் பாய்தோடிய குருதியின் மனமே எங்கும் வியாபித்த நேரம். அண்டை அயலில் ஒலித்த பேச்சுக்கள் புதிய தொனியில் -மரண பயத்தில் அங்கலாய்ப்பில் -உயிர் தப்ப வேண்டுமே என்ற ஆவலில், ஒலித்த நேரம். ஒலிக்கும் குரல்கள் இவ்வாறு தான் ஒலித்தன.

மதிய நேரம் வானில் குண்டு வீச்சு விமானங்களின் வட்டம். வீட்டினுள் ஒடுங்கி இருந்தவன் குளிக்கலாமென்று கிணற்றடி



செல்கின்றான். கிணறோ மறைப்பின்றி வெளியாக உள்ள காணியில், தாய் உரத்த குரல் எழுப்புகின்றாள்; "மோனே ஊரடங்குச் சட்டம் போட்டாச்சாம். உள்ளே வா. மேலிருந்து பார்த்தால் குளிக்கிறது தெரியும். குண்டைப் போட்டிடுவான்". இடை நடுவில் குளிப்பை விட்டு மகன் ஓடுகின்றான்.

இன்னொரு வீடு, துவைத்த துணிகளை உலரப் போட மகள் முனைகிறாள். தந்தை சொல்கிறார்; "பிள்ளை கன துணிகளைக் காயப்போட்டால், 'காம்ப்' என்று வீட்டை நினைப்பான்கள். வெயில் இல்லா விட்டாலும் பரவாயில்லை. மரநிழலில் உடுப்புக்களைக் காயப் போடு. ".

முன்னால் உள்ள வீதியில் போராளிகளின் வாகனம் செல்கின்றது. மருண்டு, அரண்டு மக்களின் பார்வை. சென்ற வாகனம் ஏதோ கோளாறால் நிற்கிறது. அண்டை அயல் வீடுகள் காலியாகின்றன. வீட்டுக்காரரர் முணுமுணுக்கிறார்: "நாசமாய்ப் போக....என்ரை வீட்டுக்கு முன்னாலை வந்து நிண்டுட்டாங்கள். அவன் (விமானி) கண்டான் எண்டால் வீடு சரி" அவர் ஆற்றாமையினால் அரற்றுகிறார்.

இரவிலும் குண்டு வீச்சுத் தொடங்கி விட்டது. அதுவும் சகடை வீசத் தொடங்கி விட்டது. குண்டு விழுந்து வெடித்த பின்னரே எங்கே என்று அனுமானிக்க முடியும். மக்கள் செவியெல்லாம் பாம்புச் செவியாகின. சகடையின் ஓசையைத் தவிர வெறெதுவும் காதில் நுழையாது. பலாலியை விட்டுப் பெருமூச்சுடன் சகடை கிளம்பும் போதே, ஒலிவாங்கிகளாக காதுகள் உயிர்ப்புப் பெற்றன. பிறந்த குழந்தை தாயொலி கேட்கமுன் குண்டொலி கேட்டுக் கண் விழித்துக் கதறிய நேரம். "குடிமனைக்குள் போடுகிறானே. கோதரியில் போவான். கடவுளே உனக்குக் கண்ணில்லையா"? என, மக்கள் கதறிய காலம் அது. "மரம், செடி கொடி பச்சைகள் பொசுங்கிய நாற்றம். ஈனக் குரலில் தவிப்பு. நாய்களின் ஊளை. நகரம் இறந்துபடுமோ" எனக் கவிஞர்கள் ஓலமிட்ட நேரம்.



பின்னர் தொண்ணூறும் முடிந்தது. இன்று தொண்ணூற்று மூன்றும் ஆகிவிட்டது. இன்று மக்கள் தலை நிமிர்ந்து செல்கிறார்கள். சீறுகிறார்கள், சினக்கிறார்கள், பாடுகிறார்கள், ஆடுகிறார்கள் ஆனால் அழுகிறார்களில்லை. "உன்னி உன்னி" சைக்கிள் ஓடி உழைக்கின்றார்கள். ஒய்கிறார்களில்லை. அண்மையில் மிகையொலி விமானம் சித்தன் கேணியில் குண்டு வீசுகின்றது. சைக்கிளில் செல்லும் மக்கள் நிமிர்ந்து பார்க்கின்றார்கள் இல்லை. பார்த்தால் வீதி விபத்தில் சிக்க நேரிடும் என்பது அவர்கட்குத் தெரியும். "கண் துஞ்சார்க் ...... ... கருமமே கண்ணானார்" என்ற

# இன்றும்...

பாடல் மனதிலே வடிவம் கொள்கிறது.

இருவர் பேசிக்கொண்டே செல்கிறார்கள்: "அட இப்ப சுப்பர் சொனிக்கிலிருந்து றொக்கட் மோட்டரும் அடிக்கத் தொடங்கிட்டாங்கள் போல". மற்றவர் சொல்கின்றார்: "இல்லையடாப்பா, இது 'கனன்' கண்டியோ. கடற்படை பீரங்கி போலை இது விமானத்திலை பெலிட்டிலை போகும். பட்டினை அமத்தினால் போதும். மொந்தன் வாழைப் பழத்தின் சைசிலை" எனக் கையால் அளவும் காட்டிச் சொல்லுகின்றார். தெருவெங்கும் வாகனங்கள் -போராளிகளின் வாகனங்கள் மட்டுமல்ல: பொது மக்கள் வாகனமும்தான்.

இரவில் வீடுகளில் வெளிச்சங்கள், ஆலயங்களில் மின்னொளிகள், உலங்கு வானூர்தியைக் கண்டோ விமானங்களைக் கண்டோ, யாரும் விளக்கணைக்கின்றார்கள் இல்லை. பதிலாக குப்பி விளக்கையாவது ஏற்றுகிறார்கள். காக்கை பறக்கின்றது. விமானங்கள் பறக்கின்றன. மக்கள் பாடுகின்றார்கள். மண் வெட்டி, கலப்பைகளைப் போலத் துப்பாக்கிகளைக் கணிக்கிறார்கள். அற்புதம் நிகழ்கின்றது. இசைவாக்கம் பெற்று, இயல்பாக வாழ மக்கள் முனைகிறார்கள். ஆனாலும் இடியோசை போல 'செல்' விழுந்து வெடிக்கின்றது. குண்டு வீச்சுக்கள் -சிதறும் அங்கங்கள் -பாயும் பச்சைக் குருதி -எதுவுமே மாறவில்லை. ஆனால் மக்கள் மாறி இருக்கின்றார்கள். துயரங்கள் ஆழமான வடுவாக, ஓடும் குருதி உறைந்த பனிக்கட்டியாக மனதிலே உறைய, மக்கள் மலையாக இறுகி விட்டார்கள். சினம் என்னும் நெருப்பு கொழுந்து விட்டெரிய, வியர்வை ஆறாக ஓட, உடற் தசை தளர, உயிர் குலை நடுங்க உழைத்து, தாமும் வாழ்ந்து, தாயகத்தையும் வாழ வைக்கிறார்கள். இறப்பு இயல்பானது. ஆனால் மகத்தானது என்பதையும், மக்கள் புரிந்து விட்டார்கள். இவர்களைத்தான் வள்ளுவன், "கூற்றுவன் உடன்று (வெகுண்டு) மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் மக்கள்". "ஓட்டார் (பகைவர்) பின்சென்று சென்றொருவன் வாழ்தலின் அந்நிலை கெடுதல் நன்றென வாழும் மக்கள்".

"நெருதர் (நேற்று) உளனொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்து இவ்வுலகம்" என்பதை உணர்ந்த மக்கள் என்கிறான்.

உணர்வு ரீதியான எம்மக்களின் இந்நிலையை அறிவு ரீதியாக ஒப்பிட்டு இப்போது பார்த்தால், முன்னர் தேசிய இனம் என்றால் என்ன என்கிற மரபிலக்கணத்தை உருப்போட்டது ஞாபகம் வருகின்றது. தொடர்ந்த தாயகம், பேசும் மொழி ஒன்று, நீண்ட வரலாறு, சொந்தமான பொருளாதாரம், கலை பண்பாடு எனப்படித்து, அதற்குள் தமிழினத்தை நுழைக்கலாமா முடியாதா என, ஆராய்ச்சிகள் செய்த காலம் அது. பலர் முடியும் என்றனர். சிலர் முடியாது என்றனர். இன்று தேசிய இனம் பற்றிய, நவீனமான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தையும் பார்க்கலாம்.

1) கடந்த காலத்தில் வியத்தகு பணிகளைச் செய்தவர்கள் என்கிற எண்ணமும், இனி மேல் செய்யப்போகிறவர்கள் என்ற எண்ணமும்.
2) தேசிய வீரர் (மாவீரர்) பலரைக் கொண்டிருக்கும் தன்மையும்.
3) மண்பற்றுக்கு முதலிடமும், ஒன்றுபட வேண்டும் என்கிற எண்ணமும்.
4) குறிப்பிட்ட பகுதியில் தொடர்ந்து வாழ்வதோடு மட்டுமல்லாமல், அவ்வாழ்விடத்தை வெளியாரிடம் இருந்து பாதுகாத்துவர முயல்கின்ற முனைப்பும்.
5) தனியொரு மொழியோடு அல்லது தொடர்பு பட்ட பேச்சு வழக்கோடு, நாம் ஒரே இனக் குழு என்கின்ற ஆழமான எண்ணமும், நீண்டகாலத் தொடர்பும் கொண்ட மக்களே தேசிய இனம் என்கின்ற வரையறைக்குள் உட்படுவார்கள் என, அறிஞர் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

போராட்டம் மக்களின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா என்ற கேள்விக்கு, விடை கிடைத்து விட்டது! ■

## விழுதுகள்....

அவன் செய்த செயற்பாடுகள் யாவும் உங்களுக்கு தெரியும் தானே" என்றும் சொல்லி முடித்தார்.

ஆம் உண்மைதான். அதன் பின்பு நடைபெற்ற பல தாக்குதல்களிலும் நான் இவனுடன் கூட இருந்தேன். இதில் பலராலும் பேசப்படும் பெரியதம்பனை அடிபாட்டை எடுத்துக் கொண்டால், அத்தாக்குதலில் இவன் மருத்துவசேவையை மட்டும் செய்யாமல் கண்ணி வெடி வைத்தல். வாகனம் செலுத்துதல் போன்ற பணிகளையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டிருந்தான். இதற்கு நான் "ஏன் இப்படி செய்கிறாய் மெடிக்சை விடப் போகிறாயா?" என்று கேட்டால், "இல்லை அக்கா நான் மெடிக்சை விடமாட்டன். ஆனால் நாம நாட்டுக்கு நிறைய செய்யக்கிடக்கு. தனிய மெடிக்ஸ் செய்தா காணாது " என்பான். இத்தாக்குதலில் தான் ஒரு சந்தர்ப்பத்தில் லெப். கேணல் ராஜனுக்கு கையில் காயம். அதில் இருந்து கடுமையான குருதிப்பெருக்கு. பகல் நேரம். சகடைகள் இரண்டு இடைவிடாது மாறிமாறிக் குண்டுகளை கண்டபாட்டுக்கு போட்டுக்கொண்டிருந்தன. சிந்திக்க நேரமில்லை. துணிந்து வாகனத்தை எடுத்தான். லெப். கேணல் ராஜனை ஏற்றினான். வெட்டையூடாக, குண்டு மழைக்கு மத்தியில் "எங்கை ஏலுமானால் என்ரை வாகனத்துக்கு குண்டு போடு பாப்பம்" என்ற விதமாக வேகமாக படுசாமர்த்தியமாக, ஆனால் எதுவித பாதிப்போ சேதமோ இல்லாமல் அவரை எம்மிடத்திற்கு கொண்டு வந்து சேர்த்து விட்டான். இந் நிகழ்வை பின்பு சகல பொறுப்பாளர்களும் பாராட்டியதை, நான் என் காதால் கேட்டு மகிழ்ந்தேன்.

இறுதியாக இவன் என்னை யாழ்ப்பாணத்தில் வைத்து 1992-ஆம் ஆண்டு தை மாதம் 1-ம் திகதி சந்தித்துக் கதைத்தான். அப்போது மீண்டும் என்னிடம் இரு உதவிகள் கேட்டான். ஒன்று; தான் மேலும் சத்திர சிகிச்சை பற்றிப் படிக்க வேணும். அதற்கு ஒழுங்கு செய்யும்படியும்; மற்றது, முதலுதவி பற்றி முழுவதுமாக உள்ளடக்கி ஓர் புத்தகம் எழுதி தனது மாவட்டத்திற்கு தருமாறும் கேட்டான். நான் என்றுமே இவனின் வேண்டுகோளை நிராகரித்தது கிடையாது. இவனின் ஆசைகள் வேண்டுகோள்கள் யதார்த்தமானவை. இவனின் ஏக்கங்கள் நியாயமானவை. இவன் இவ் உதவிகள் கேட்டு ஐந்து நாள், மிக அவசரமாக தன் உன்னதபணிகளை விட்டு விட்டு எம்மையும் விட்டு விட்டு, தூரப் போய் விட்டான். நான் மன்னாருக்கு இறுதியாக நடந்த தாக்குதலுக்கு போனபோது இவனில்லை. என்னை வரவேற்க. இவன் காட்டிய இடங்கள், இவன் நடந்த இடங்கள் ஆகியன என்னை வெறுமையாக பார்ப்பது போல் உணர்வு. அதிலும் குறிப்பாக குஞ்சிக் குளத்திலுள்ள தொங்கு பாலத்தில் நடந்தபோது இவன், கூட வருவது போல் ஒரு பிரமை. ஆனால் இவன் தான் இன்று எம்மிடையே இல்லையே தவிர இவன் வளர்த்து விட்ட இவனின் தகமைகளைக் கொண்ட பல சயந்தன்கள் இவனின் ஆசைகள், எதிர்பார்ப்புக்களைச் சுமந்து கொண்டு மருத்துவ சேவையை செய்யத்தொடங்கியுள்ளார்கள். இன்று இவனின் கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இவனது ஆசைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. ■

**-டாக்டர் அக்கா-**

## புலிகளின் பெயரால் ஊர்காவற் படை கொள்ளை

கல்முனைக்கு அருகில் உள்ள சேனைக்குடியிருப்பு பகுதியில் புலிகளின் பெயரைச் சொல்லி முஸ்லீம் ஊர்காவல் படையினர் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி கிராம சேவையாளர் புகார் செய்துள்ளார்.

தங்களைப் புலிகள் என்று கூறிக் கொண்டு, இரவு வேளைகளில் கோஸ்டியாகச் செல்லும் இவர்கள் பொதுமக்களிடம் கொள்ளையடிப்பதாக பிரதேசச் செயலகக் கூட்டத்தில் வைத்து இவர் முறையிட்டார்.

பொதுமக்களிடமிருந்து பெருமளவு பணமும், நகைகளும் இக் கோஸ்டியினரால் கொள்ளையிடப்பட்டதாகவும், இவர்கள் சேனைக்குடியிருப்பு பகுதியில் கட்டுமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறிய இவர், உயர் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

புலிகளின் பெயரைச் சொல்லி கிராம மக்களுக்கு நன்கு தெரிந்த முஸ்லீம் ஊர்காவல் படையினரே இக்கொள்ளையில் ஈடுபடுவதாக இக்கூட்டத்தில் பலர் முறையிட்டனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







**1992ம்** ஆண்டு தைமாதம் 7ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நான் எனது முகாமில் உள்ள அலுவலக அறையில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மன்னாரிலிருந்து வந்து மருத்துவம் படித்துக் கொண்டிருக்கும் போராளி ஒருவர் எமது முகாமிற்கு வந்து என்னுடன் இருக்கும் ஒரு பிள்ளையிடம் அக்கா நிற்கிறாவோ? என்று கேட்டான். அவனின் குரல் அவன் கேட்ட விதம் பதற்றமாக இருந்தது. இது என் மனதில் ஓர் இனம் தெரியாத கலக்கத்தை ஏற்படுத்தியது. எனவே நான் உடனடியாக அறையில் இருந்து வெளிப்பட்டு அவனருகே வந்து "என்ன விசயம் அப்பன்" என்று கலவரத்துடன் கேட்டேன். அவன் ஏற்கனவே நிறைய அழுது இருந்தான். நான் கேட்டவுடன் "அக்கா சயந்தண்ணை வீரச்சாவக்கா" என்று கூறிவிட்டு மீண்டும் அழத்தொடங்கிவிட்டான். இது....- இது.... எப்படி? ...சீச்சீ... இருக்காது.... அப்படி இல்லை.. எப்படி இவ்வளவு சீக்கிரம்?? என் நெஞ்சு ஒரு கணம் அப்படியே இறுகிவிட்டது. எனக்கு வாயில் வார்த்தை வரவில்லை. உடல் பதறிக் கொண்டிருந்தது. ஒருவாறு என்னைச் சுதாகரித்துக்கொண்டு "[illegible] இப்பதானே இங்கிருந்து போனான். போய் ஐந்துநாள் கூட ஆகவில்லையே" என்றேன். அதற்கு அவன், "அக்கா சயந்தண்ணை மட்டுமல்ல, வேணு அண்ணை, குகன் அண்ணை, குட்டிமணியண்ணை மொத்தம் நாலுபேர். நேற்று வெயிக்கிள் மைன்ஸ் வைக்கேக்கை மிஸ் ஆகிட்டுதாம். அதோட சயந்தண்ணையின் பொடி கூடக் கிடைக்கவில்லையாம் என்கிறாங்க" என்று கூறி முடித்தான். என்ன கொடுமையிது. ஒன்றாக மன்னாரின் மாமணிகள் நான்கும் இதை எப்படி அவர்கள் தாங்கப் போகிறார்கள். இதில் எங்கட சயந்தனுமா? இனி இவன் தனது புனிதசேவையை தொடரவரமாட்டானா. இது உண்மையா? என்னால் இன்னமும் நம்பவேமுடியவில்லை. இச்செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்ற ஏக்கம்.

மருத்துவ சேவையில் என்னவென்ன அபிவிருத்திகள் எதிர்காலத்தில் செய்யவேண்டுமென்று ஐந்து நாட்களுக்கு முன்பு கூட என்னுடன் கலந்தாலோசித்தானே. எதிர் காலத்தில் மன்னாரில் வைத்தே எம் போராளிகளின் உயிரைக் காப்பாற்றும் நோக்குடன் சில சத்திரசிகிச்சைகள் செய்வதற்கு, அதற்காக அனுபவம் பெறுவதற்கு நான்படிக்கப் போகிறேன். அதற்கு ஒழுங்கு பண்ணுங்க. மீண்டும் விரைவில் வருவேன் என்று கூறிவிட்டுப் போனானே. இவை அனைத்தையும் விட்டுவிட்டு இவ்வளவு விரைவாக போவான் என்று யார்தான் நம்புவார்கள். யாருக்குத் தான் வேதனையிருக்காது. இதனால்தானோ என்னவோ இழப்புக்கள் பலதை தாங்கிய என் இதயம் கூட இவ் இழப்பினால் ஒரு கணம் கனத்தது.

நான் முதல் முதலாக இவனைச் சந்தித்த நிகழ்வு, இன்னும் என் மனதில் பசுமையாக நிழலாடுகின்றது. 1989-ம் ஆண்டு ஆவணி மாதம் மதுரையில் நான் தங்கியிருந்த காலத்தில், இவன் மன்னாரில் இருந்து காயமடைந்த போராளிகளை மேலதிக விசேட சிகிச்சைக்காக அங்கு கொண்டு வந்திருந்தான். அப்போது ஒரு நாள் என்னிடம் வந்து, "அக்கா நாம கொஞ்ச நாளைக்கு இஞ்சை தங்க வேண்டியிருக்கு. அதுவரையும் சும்மா நிற்காமல் மெடிக்ஸ்சில் ஏதாவது படிக்க விரும்பிறம். என்னோட இன்னொரு மெடிக்ஸ் றங்கனும் கூட வந்திருக்கிறார். நீங்க எங்க இரண்டு பேருக்கும் ஏதாவது படிப்பியுங்களேன்" என்றான். இதில் ஒரு விடயம் என்னவென்றால் அவர்கள் இருவரும் ஏற்கனவே மருத்துவத்தைப் பற்றி நிறையத் தெரிந்தவர்கள். மன்னாரில் காயமடைந்த போராளிகள் பலருக்கு சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்றியவர்கள். அப்படிக் களத்தில் நின்று நிறைய அனுபவம் பெற்றவர்கள். அப்படியிருந்தும் என்னிடம் வந்து தங்களுக்கு மருத்துவம் படிப்பிக்குமாறு கேட்டவிதம் இவனை என் மனதில் நன்றாக உயர்த்திவிட்டது. அத்துடன், இவனுடன் ஒரு சில மணித்தியாலங்கள் கதைத்ததில் இவனுக்கு மருத்துவசேவையில் உள்ள பற்றுதலையும், காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றுவதில் இருந்த அக்கறையையும் அத்துடன் தன் மாவட்டத்தில் மருத்துவத்தை எப்படியெல்லாம் விருத்தியடையச் செய்யவேண்டுமென்ற அவாவையும் எனக்கு எடுத்துக்காட்டியது. இதற்கு நான் உடனடியாகச் சம்மதித்து ஒவ்வொரு நாளும் ஒரு சில மணித்தியாலங்களுக்கு போர்க்காயங்கள் பற்றியும் அவற்றிற்கான முதலுதவி சிகிச்சை போன்றவற்றையும் என்னால் இயன்றவரை படிப்பிக்கத் தொடங்கினேன. இப்படிப் படிப்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் சில சமயம் நான் வைத்தியசாலை வேலைப்பளுவின் நிமித்தம் களைத்துவந்து படுத்து விடுவேன். ஆனால் இவன் விடமாட்டான். நான் வந்து மெதுவாக படுக்கையில் சரியவும் வந்து கதவைத்தட்டி, "அக்கா வந்திட்டீங்களா. படிக்க வரலாமோ?" என்று கேட்பான். இவனின் இத்தகைய அதிதீவிர ஆர்வம் என் களைப்பை ஒரு நொடியில் போக்கிவிடும். உடனே நான் எழுந்து வகுப்பு எடுக்க தொடங்கி விடுவேன்.

இவன் படிப்பிலும், வேலையிலும் உற்சாகமாகச் செயல் பட்டாலும் ஓய்வு நேரத்தில் அமைதியை விரும்புவான். மௌனமாக ஏதாவது யோசித்துக் கொண்டுஇருப்பான். இதை நான் கவனித்து "என்ன அப்பன், யோசனை. ஏதாவது பிரச்சினையா? அல்லது ஏதாவது கவலையா?" என்று கேட்டால் "சீ அப்படி ஒன்றுமில்லை. ஏன் அப்படிக் கேட்டீங்க" என்றுவிட்டு புன்னகைப்பான். அப்புன்னகையில் ஒன்றுமே புரியாது. இவன் அதிகம் அலட்டமாட்டான். நான் பாராட்டினாலும் ஓர் புன்னகை தான். நான் ஏசினாலும் அதே புன்னகை தான். சில சமயம் எனக்கு 'புத்திமதிகள்' கூறுவான்; ஆறுதல் கூறுவான். அவ்வேளையில் எனக்கு இவன் மூத்தசகோதரன் ஆகமாறி விடுவான். இவ்வாறு அக்கறையுடன் நான்கு மாதங்கள் படித்து முடித்ததும், இவனுக்கும் றங்கனுக்கும் மன்னார் திரும்ப வேண்டிய காலம் வந்துவிட்டது. உடனே தாம் மன்னார் போய் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ வேலைத்திட்டத்திற்கு என்னுடன் சேர்ந்து தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் போன்றவற்றை இரவிரவாக பட்டியல் தயாரித்து, பின்பு கடை கடையாக ஏறியிறங்கி அவற்றைக் கொள்வனவு செய்து, அவற்றிற்கு எல்லாம் பொலித்தீன் போட்டு கடற்பயணத்திற்கு ஆயத்தமானான்.




இவன் எம்மையெல்லாம் விட்டுப் பிரியப் போகின்றான் என்றவுடன், எனக்கு மட்டுமல்ல, என்னுடன் தங்கியிருந்த மற்றைய போராளிகள் அனைவருக்கும் இனம் தெரியாத வேதனை. இதற்குரிய காரணம் என்னவென்றால் இவன் பழகும் விதம், காட்டும்பரிவு, மரியாதை, பாசம், பண்பு போன்றவைதான். இவற்றை எந்த காலத்திலும் மறக்க முடியாது. இவற்றையெல்லாம் விட எனக்கு இவனில் பிடித்த குணம் என்னவெனில், நான் மருத்துவ சம்பந்தமாக என்மனதில்பட்ட கருத்துகள், எண்ணங்கள், ஆலோசனைகள் ஏதாவது சொன்னால் அதை ஒரு போதும் மறக்கமாட்டான்; அசட்டை செய்யமாட்டான்; அக்கறையாக கருத்தில் எடுத்துக் கொள்வான். பின்பு இவற்றையெல்லாம் பல சந்தர்ப்பங்களில் செயலில் காட்டி வெற்றியும் கண்டுள்ளான்.

இவன் மன்னார் கிளம்பும் நாளன்று வண்டிக்கு போகமுதல் என்னுடன் கதைக்கும்போது, என்னிடம் ஓர் உதவி கேட்டான். அதை உதவியென்று சொல்வதை விட வேண்டுகோள் என்றே சொல்லலாம். அது என்னவெனில் "அக்கா நாம் இன்று மன்னார் போறம். நீங்கள் படிப்பித்ததை, சொல்லித் தந்ததை நிச்சயமாக செயலில் காட்டுவம். நீங்க தொடர்ந்து எங்களைமாதிரிப் பிள்ளைகளுக்கு படிப்பிக்க வேணும். என்றோ ஒரு நாள் நாம் தமிழீழத்தைப் பார்க்கும் போது அங்கை காண்கிற இடமெல்லாம் அக்காவின் பிள்ளைகள்தான் மெடிக்ஸ் செய்ய வேணும். இது என்ரை ஆசை. அதோடை நீங்க நாட்டுக்கு போனால், எமது தலைவரிடம் அனுமதி பெற்று ஒருக்கா மன்னார் காட்டுக்கு வந்து (அப்ப அவர்கள் காட்டு வாழ்கை தான்) அங்கை எங்களுக்கு ஒரு மினித்தியேட்டருடன் கூடிய ஓர் மெடிக்ஸ் செற்றப் செய்ய ஆலோசனை தரவேணும். அக்கா நீங்கள் மருந்து சம்பந்தமாக ஏதாவது புதிதாக அறிந்தால், அல்லது மருந்துகளைப் பற்றி புதியதகவல்கள் கிடைத்தால் ஏதாவது ஆலோசனைகள் தெரிவிக்கவேணும் என்றால், அவற்றையெல்லாம் விளக்கமாக எழுதி என் பெயர் போட்டு மன்னாருக்கு அனுப்பி வையுங்க" என்றான். இன்று வரை நான் இவனின் வேண்டுகோள்களை நிராகரித்தது கிடையாது. தொடர்ந்தும் இவனின் ஆசையை இறுதி மூச்சுவரை செய்யக் காத்திருக்கிறேன்.



மேஜர் சயந்தன்

நான் இந்தியாவில் இருந்து 90ம் ஆண்டு எமது மண்ணிற்கு வந்த காலம் தொட்டு இவனுடன் கடிதம் மூலம் தொடர்பு வைத்திருந்தேன். ஆனால் இவனை முதல் முதலாக நேரடியாக சந்தித்தது சிலாவத்துறை வரலாற்றுச் சமரின் போது தான். இத்தாக்குதலுக்கு நாம் போன போது ஏற்கனவே இவனும், இவனுடன் கூட இருந்த மற்றைய மருத்துவப் போராளிகளும் சகலவிதமான ஒழுங்குகளையும் செய்து முடித்திருந்தார்கள். ஒரு களத் தாக்குதல் நடவடிக்கைக்கு எப்படி மருத்துவக்குழு தயாராக வேண்டுமோ அப்படி எதுவித குறையுமில்லாமல் தயார்ப்படுத்தி வைத்திருந்தான். இவன் அத்தாக்குதலில் அடம்பனிலுள்ள ஒரு மருத்துவ வீட்டில் என்னுடன் நின்று செயற்பட்டான்.

அங்கு நாம் எம்மிடம் வந்த காயமடைந்தவர்களில் உடனடியாக விசேட சிகிச்சைக்குட்படுத்த வேண்டியவர்களை உடனுக்குடன் வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டு, மீதி சிறிய காயம் உள்ளவர்களை வேறு ஒரு மருத்துவ முகாமிற்கு அனுப்பினோம். அடுத்தநாள் காலை தாக்குதல் நின்றுவிடும். நானும் இவனும் முதல் நாள் இரவு வேறு ஒரு முகாமிற்கு அனுப்பிய சிறியகாயமுள்ள போராளிகளை போய்பார்வையிட்டு அங்கு அவர்களுக்கு பூரணசிகிச்சை அளிப்போம். இதில் இவனின் பங்கு கணிசமானது; வியக்கத்தக்கது; பாராட்டத்தக்கது. இதில் ஒரு நோயாளிக்கு நான் மயக்க மருந்து கொடுத்தால் இவன் ஒப்பிரேசன் செய்வான். மற்றைய நோயாளிக்கு "நான் மயக்க மருந்து கொடுக்கிறேன். நீங்க அக்கா ஒப்பிரேசன் செய்யுங்க" என்பான். இதில் இருந்து என்ன விளங்கிறது என்றால், இவன் ஒரே நேரத்தில் சேர்ஜரியையும். அனஸ்தீசியாவையும் படிக்க, பழக விரும்புகிறான். இதற்குரிய காரணத்தையும் இவனே சொன்னான். "அக்கா இப்படி நாம பழகினால் தான் தற்செயலாக நீங்க வர முடியாவிட்டாலும் நாம எங்கட பொடியங்களைக் காப்பாற்றலாம். அதோட அவசரத்துக்கு உதவும் " என்றான்.

நான் இவனைப்பற்றி எழுதிக் கொண்டிருந்த வேளையில், ஒரு மருத்துவ கருத்தரங்கிற்காக மன்னார் மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர் ஜீவன் இங்கு வந்திருந்தார். இவரும் சயந்தனும் 1985ம் ஆண்டு தொடக்கம் ஒன்றாக செயற்பட்டவர்கள். நான் அவருடன் சயந்தனைப்பற்றி அளவளாவிக்கொண்டிருந்த போது ஒரு கட்டத்தில் அவர், "அக்கா அவன் மருத்துவத்தில் மட்டுமல்ல, வேறும் பல வேலைகளில் திறமை சாலி. உதாரணமாக குறிபார்த்து சுடுவதில், வாகனம் ஓட்டுவதில், ஏன் கண்ணிவெடி வைப்பதில் அவனுக்கு நிகர் அவனேதான். அத்துடன் அவனில் ஒரு பழக்கம் என்ன வென்றால் தான் அறிந்ததை மற்றவர்களுக்கு உடனடியாக சொல்லிக்கொடுக்கவேணும் அந்த விடயத்தில் பலரை ஊக்குவித்து முன்னேற்ற வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை உடையவன்" என்றார். அவர் மேலும் குறிப்பிடுகையில், "அவன் பங்குபற்றின தாக்குதல் பல. அவற்றில்:

* 86-ம் ஆண்டு முற்பகுதியில் மடுறோட்டில் இலங்கை இராணுவத்தின் மீது பதுங்கியிருந்து தாக்கிய தாக்குலிலும்.
* அதேகாலத்தில் கொக்காவில் இலங்கை இராணுவதொடர் அணிமீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் பங்கு பற்றி,
* 86-ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னார் தீவில் முன்னாள் மன்னார் மாவட்ட தளபதி சாஜகானுடன் இணைந்து ஒரு ஜீப் வண்டி மீது தாக்குதல் நடத்தினான். இதில் ஜீப் வண்டி முற்றாக சேதமடைந்ததுடன் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
  பின்பு 87-ம் ஆண்டு ஆனி மாதம் பூநகரி கோட்டைத்தாக்குதலிலும்,
* 87-ம் ஆண்டு பிற்பகுதியில் விடத்தல்தீவில் ரெலோ சமூக விரோத கும்பல் மீதான தாக்குதலிலும்,
* 87-ம் ஆண்டு முருங்கன் பிட்டியிலும், 88-ம் ஆண்டு அச்சங்குளத்திலும் புளொட் சமூக விரேதக் கும்பல் மீதான தாக்குதலிலும் பங்குபற்றினான்.
* இவற்றைவிட 88-ம் ஆண்டு பெரியமடு -பள்ளமடு வீதியில் சன்னார் என்ற இடத்தில் ரோந்துவந்த இந்திய இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய குழுவுக்கு தலைமை தாங்கினான். இதில் 6 இராணுவம் கொல்லப்பட்டது.
* 90 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வரலாற்றுச் சமரான கஜவத்தை முகாம் தாக்குதலில் மருத்துவ சேவையைப் பொறுப்பேற்று செயற்படுத்தினான். அதன் பின்பு புத்தளம் சிலாவத்தை வீதியில் முள்ளிக்குளத்தில் இருந்து சிலாவத்துறைக்கு முன்னேறிய இலங்கை இராணுவத்தின் மீதான தாக்குதலில் மருத்துவச்சேவை, கண்ணி வெடி வைத்தல் ஆகிய இருபணிகளையும் ஒரே நேரத்தில் கவனித்தான்"

என்று கூறி "அக்கா இதன் பிறகு 91-ம் ஆண்டு மாசி மாதம் நடைபெற்ற சிலாவத்துறை தாக்குதலில் தொடங்கி இறுதிவரை

தொடர்ச்சி 9ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடவுளே! மருந்
# இன்று ஒருவரு

## - வேண்டுத



சி றீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் காரணமாக இன்று தீவுப்பகுதி, வலி வடக்கு, வலி மேற்குப் பகுதிகளில் அமைந்திருத்த வைத்தியசாலைகள் ஸ்தம்பி த நிலையை அடைந்துள்ளன. மேலும் அப்பகுதியில் வசித்த மக்கள் பெருமளவில் வெளியேறி வலிகாமம் பகுதியிலுள்ள அகதி முகாம்களிலும், மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதே வேளை, இராணுவ நடவடிக்கைகளினால் காயம் அடைபவர்கள் அகதி முகாம்களில் சுகாதாரச் சீர்கேடு, பொருளாதாரத் தடையினால் போசாக்கின்மை, தொற்றுநோய் தடுப்புகள் சரியாக மேற்கொள்ளப்படாமை என்பவற்றால் வைத்தியசாலைகளின் தேவைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் யாழ். போதனா வைத்தியசாலை என்றுமில்லாதவாறு பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளது.

யுத்தத்தின் மையப்பகுதியாகக் காணப்படும் வடபகுதியைப் பொறுத்தவரை, கூடுதல் வசதியைக் கொண்ட ஒரேயொரு வைத்தியசாலையாக யாழ். போதனா வைத்தியசாலையே காணப்படுகின்றது. ஆனால் இந்த வைத்தியசாலை கூட வடபகுதி மக்களுக்கு எவ்வளவு தூரம் முழுமையான சேவையை வழங்குகின்றது என்பதை மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது.

சிறீலங்காவின் ஏனைய போதனா வைத்தியசாலைகளுடன், யாழ். போதனா வைத்தியசாலையை ஒப்பிட்டுப் பார்த்தால் தென்னிலங்கையில் உள்ள சாதாரண வைத்தியசாலையைக் கூட இதைவிடக் கூடிய வசதிகளுடன் இயங்குகின்றது என்றே கூறலாம். போதனா வைத்தியசாலைக்குரிய அடிப்படை வசதிகள் கூட இங்கு இல்லை. கப்பல் வரவு இல்லையென்றால் மருந்து இல்லை; எரிபொருள் இல்லை; மின்சாரம் இல்லை என்ற நிலையில் இவ் வைத்தியசாலை இயங்குகின்றது.

மேலும், வைத்தியர்கள் பரிசோதனைகள் செய்வதற்கான அடிப்படை வைத்திய வசதிகள் கூட இங்கு இல்லை. இதனால் நோய்களைக் கண்டறிவதே பெரும் சிரமமாகின்றது. நோய்கள் கண்டறியப்பட முன்பே பல மரணங்கள் சம்பவித்துள்ளன.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு நாளாந்தம் சுமார் 800 தொடக்கம் 950 வரையிலான மக்கள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சுமார் 75 முதல் 90 வரையிலானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு அனுமதிக்கப்படுபவர்கள் 30 விடுதிகளிலுள்ள சுமார் 850 கட்டில்களிலும் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர். இங்கு எல்லா விடுதிகளும் நோயாளர்களினால் நிரம்பி, நோயாளர் வெளி விறாந்தைகளில் படுத்திருப்பது சாதாரண நிகழ்வு.

இந்த நோயாளருக்கும், ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கும் உணவுத் தேவைக்கு மட்டும் மாதாந்தம் சுமார் நான்கரை இலட்சம் ரூபா வரை செலவிடப்படுகின்றது. இதில் சுமார் 150 நோயாளரும் சுமார் 330 தொழிலாளரும் உள்ளடங்குவர். ஆனால் இங்கு சுகாதாரம் பேணப்படுவது குறைவு. உணவின் தரமும் அவ்வளவு நன்றாக இல்லை. ஏதோ உணவு

# யாழ் போதனா
# இன்

என்று உண்ண வேண்டிய நிலையில் நோயாளர்களும், ஊழியர்களும் உள்ளனர்.

வெளி நோயாளர் பகுதியில் வைத்தியர்கள் எழுதிக் கொடுக்கும் அளவு மருந்துகள், மருந்துக் கலவையாளர்களால் வழங்கப்படுவதில்லை என புகார் செய்யப்படுகின்றது. இது தொடர்பாக விசாரித்த போது பின்வரும் காரணங்களை மருந்துக் கலவையாளர் தெரிவித்தார்.

"வெளிநோயாளர் பிரிவில் மருந்து எடுக்க வருபவர்கள் அனைவருக்கும் மருந்து கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் டாக்டர்கள் எழுதி அனுப்பும் அளவைவிட குறைத்துக் கொடுக்கின்றோம். ஆனால் பற்றாக்குறையாக உள்ள மருந்துகளையே இப்படி

வழங்குகின்றே
தம் அல்லது
கொடுக்கும்படி
கள். நாம் எ
ருப்பை கருத்
களை குறை
பற்றி நோயாள
முடிந்ததும் வ
வந்தால் மிகு
இல்லாவிட்டா
அவர்களுக்குக்
கூறினார். இ
மருந்துத் தட்

கொள்ளக் க
முறை, மோ
தைக் கவனத்

வெளிநோய
நோயாளர் 
வருவதாகவும்
கொடுக்கும் 
சமயங்களில் 
மேற்பட்ட தட
வதாகவும் இ
பனை செய்வ

போதனா
துப் பொருள்
தொடர்பாக
டபோது அ




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ...து இல்லாமல்
# ...ம் சாகக் கூடாது

## ...லுடன் பணி தொடங்கும் டாக்டர்கள்



மருந்து வகைகள் எமது தேவைக்கு போதுமானதாக இல்லை. எனவே நாம் மருந்துப் பொருள்களை பங்கிட்டு வழங்க வேண்டிய நிலையில் உள்ளோம். எமக்குக் கிடைக்கும் மருந்து வகைகளை மூன்றாகப் பிரிக்கின்றோம். இதில் முதல் இரண்டையும் வாட்டில் அனுமதித்துள்ளவர்களுக்கும், கிளினிக்கிற்கு வரும் நோயாளர்களுக்கும் கொடுத்து மூன்றாவது பிரிவையே வெளிநோயாளர் பிரிவில் உள்ள நோயாளருக்குக் கொடுக்கின்றோம். நோயின் தாக்கம் கூடியவர்களே வாட்டில் அனுமதிக்கப்படுபவர்களும், கிளினிக்கிற்கு வருபவர்களும் ஆவர். எனவேதான் இப்படிச் செய்கின்றோம். இதனால்தான் வெளி நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்து வகைகள் மட்டுப்படுத்தப்படுகின்றது என்றார். இன்றைய சூழ்நிலையில் போசாக்கின்மையாலும், தொற்று நோய்களாலும் பெருமளவில் பாதிக்கப்படுவது சிறுவர்களே. கடந்த வருடம் நோய் காரணம ாக போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானோர் சிறுவர்களே. இவற்றில் அநேகமான சிறுவர்களுக்கு, பெற்றோரின் கவலையீனத்தாலேயே நோய்கள் ஏற்படுவதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு தசாப்தங்களுக்கு மேல் தொடந்து கடமை புரியும் ஒரு வைத்தியருடன் உரையாடும் போது அவர் இவ்வாறு கூறினார்:

தற்போது வைத்தியசாலை அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்குகின்றது. மக்கள் அதிக அளவில் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இறப்பு வீதம் பாரிய அளவில் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. குழந்தைகளின் மரண வீதம் தொடர்ந்தும் அதிகரிக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடும், வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையும் ஆகும். இவை இரண்டும் இருக்குமானால், பெருமளவில் இறப்பு வீதத்தை குறைக்க முடியும்.

மக்களுக்கு போசாக்கு உள்ள உணவுகள் கிடைப்பது அரிது. எனவேதான் அதிக எண்ணிக்கையான மக்கள் நோயாளராக மாறுகிறார்கள். குறிப்பாக செப்டெம்சிமியா, மூளைக் காய்ச்சல், மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோயினால் அதிக அளவிலான குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். சில குழந்தைகள் இறக்கின்றனர்.

...ோம். சில சமயங்களில் மாதாந்
... இரு வாரங்களுக்கு மருந்து
... டாக்டர்கள் எழுதியிருப்பார்
...ம்மிடம் உள்ள மருந்தின் கையி
...தில் கொண்டு மருந்து வகை
...ந்துக் கொடுக்கும்போதும், இது
...ருக்கும் தெரிவிப்போம். மருந்து
...ந்து பார்க்கவும். இங்கு மருந்து
...தி மருந்தைத் தருகின்றோம்.
...ல் வெளியில் எடுக்கவும் என்று
... கூறுகின்றோம்" என அவர்
...வர் கூறும் காரணம் இன்றைய
...டுப்பாட்டின் காரணமாக ஏற்றுக்




சுகாதாரம் பேணுவதில் போதனா வைத்தியசாலை பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றது. தாம் எவ்வளவு முயன்றாலும் இதனை நிவர்த்தி செய்வதில் பல சிக்கல்கள் இருப்பதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

[illegible] விடுதியில் சுகாதார வசதி குறித்து கேள்வி எழுப்பிய போது, சுகாதாரத்தைப் பேணுவதில் நோய்க்குள்ளான குழந்தையைப் பராமரிக்கவென அவர்களுடைய தாய்மார்கூட நின்றபோதும் தேவையான துணி போன்றவற்றைக் கொண்டு வராமையால் சுகாதாரம் பேணுவதில் சிரமங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

சிறுவர்களை வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் போது அவர்களின் உபயோகத்திற்கு சகல பொருள்களையும் வீட்டிலிருந்து கொண்டு வருவது தான் சிறந்தது. சில தாய்மார் அவற்றை அருகிலுள்ளவர்களிடம் பெற்றுக் கொள்ள முயல்வது குழந்தைகளுக்கு தொற்றுநோய் பரவ வாய்ப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையில் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பற்றாக் குறைமிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இவ் வைத்தியசாலையில் ஒரு பொதுச் சுகாதார பரிசோதகர் கூட கடமையாற்றவில்லை. வைத்தியர், ஆய்வுகூட உத்தியோகத்தர், சிரேஸ்ட தாதிகள் முதலியவற்றில் பற்றாக்குறை நிலவுவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இப்பிரச்சினைகளின் மத்தியிலும் போதனா வைத்தியசாலை தமிழ் மக்களுக்கு குறிப்பாக யாழ். குடா மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வருவதையிட்டு பாராட்ட வேண்டும். இங்கு கடமை புரியும் ஊழியர்கள் பெரும் சிரமத்தின் மத்தியிலும் மனப்பூர்வமாக ஒத்துழைத்து நடப்பதை எவரும் மறுக்க முடியாது. ■

## ...வைத்தியசாலையின்
## ...றைய நிலை

...யதாக இருப்பினும் இந்நடை
...டிகளுக்கு வழிவகுக்கும் என்ப
...ற் கொள்ளுதல் அவசியம்.

...ளர் பிரிவிற்கு வரும் சிலர்,
...ால் நடித்து மருந்து பெற்று
... இவர்கள் டாக்டருக்குக்
...கவல்கள் பொய்யாகவும், சில
...ருவர் ஒரே நாளில் ஒன்றுக்கும்
...வகளில் இங்கு மருந்து பெறு
...ர்கள் இந்த மருந்துகளை விற்
...கவும், ஒருவர் கூறினார்.

...வத்தியசாலைக்கு வரும் மருந்
...ளும், அவற்றின் பங்கீடும்
...பந்தப்பட்ட ஒருவரிடம் கேட்
... கூறினார்: "எமக்கு வரும்

நாளாந்தம் கடமைக்குவரும் போது நான் கடவுளிடம் வேண்டுவது இன்று மருந்துத் தட்டுப்பாடு காரணமாக அல்லது உரிய பொருள்கள் கிடைக்காத காரணத்தால் ஒருவரும் இறக்கக்கூடாது என்பதாகும்.

நாம் இயன்றளவு போராடுகின்றோம். இன்று இங்குகிருந்து நோய் நீங்கிச் செல்கின்றார்கள் என்றால் தனியே மருந்து மட்டுமல்ல, எமது பராமரிப்பும் இதில் கணிசமான பங்கை வகிக்கின்றது. இவ்வாறான பராமரிப்பிற்கு தாதிகளும், பரிசாரர்களும், ஏன் சகல மட்ட தொழிலாளர்களதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது என்றார். சகலரும் தம்மை உணர்ந்து கடமை உணர்வுடன் வேலை செய்கின்றனர், என மேலும் தெரிவித்தார்.

| பதவிகள் | உள்ள தொகை | பற்றாக் குறை | தேவைப் படும் தொகை |
|---|---|---|---|
| வைத்திய அதிகாரிகள் வைத்திய நிபுணர்கள் | 61 | 26 | 87 |
| மருந்து கலவையாளர் | 24 | 8 | 32 |
| ஆய்வுகூட உத்தியோகத்தர் | 31 | 42 | 73 |
| இரத்தவங்கி உத்தியோகத்தர் | 07 | 07 | 14 |
| தாதிகள் தரம் 1 தரம் 11 | 297 | 393 | 690 |
| பரிசாரகர்கள் ஆண்,பெண் | 82 | 42 | 124 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருகோணமலை மக்களுக்கு அது ஒரு கறுப்பு நாள். திருகோணமலையின் போராட்ட வரலாற்றில் அதுவொரு நெருப்பு நாள். மாபெரும் வரலாறொன்றை சாதித்த வெற்றியுடன் திரும்பி வரும் வேளையிலே அந்த வீர புருசர்கள் இருபத்திரண்டு பேரைக் கடலலை சுருட்டிக் கொண்டது. சிறீலங்காவின் சிங்களச் சிப்பாய்களைக் கண்ணி வெடியிலே சிதறடித்தவர்கள். இந்தியக் கூலிப்படையைச் சொல்லிச் சொல்லி சுட்டவர்கள்.

ஆழ நடுக்கடலிலே பயணித்துப் பெரியதொரு வெற்றியைப் பெற்றிருந்தார்கள். அந்த மாபெரும் வெற்றியில் மகிழ்ந்த அவர்களின் மீது பொறாமை கொண்ட இயற்கை பெரும் சீற்றத்துடன் அவர்கள் மீது புயலெனச் சீறியது. அது விதியின் சதி. விடுதலைக்கு உரமிட்டவர்களை, மண்ணின் காவலர்களை விதி எனும் கொடும் அரக்கன் வெற்றியை அனுபவிக்கவிடாமல் பேரலைகளால் சர்வ நாசம் செய்து விட்டான். காலையில் விழித்தெழுந்ததுமே அடுத்த நடவடிக்கைக்கு அடித்தளம் விதியரக்கன் கடலலையை ஏவிவிட்டான் போலும். மக்களின் நெஞ்சங்களிலே மறைவீரர்களாக பவனி வந்தவர்கள் இன்று கதறியழும் மக்களிடை "மாலையிட்ட மாவீர"ராய் மாறி விட்டார்கள். அவர்கள் கட்டியாண்ட தேசம் அவர்களைத் தேடி நிற்கின்றது. 'கமல் மாமா' என்ற குழந்தைகளும், 'சுரேஸ் அண்ணா', 'மதியண்ணா' என்ற மழலைகளும் விக்கி விக்கி அழுகின்றார்கள். இனி அந்த மாமா வரமாட்டார்களா என்று கேட்டவர்கள் விழிகளெல்லாம் கண்ணீரே.

இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறுகின்ற அந்த காலகட்டத்திலே இந்திய அரசின் கைக்கூலிகளாகச் செயற்பட்ட ஈ. என். டி. எல். எவ். கைகளில் ஆயுதங்களும், காலிலே பூட்சுகளும், நெஞ்சிலே கோல்சரும் நீந்தமுடியாத நிலையாகின்றது. உப்பு நீர் வயிற்றை நிரப்புகின்றது. வாந்தியும் வருகிறது. இதுசமயம், கரையிலே இந்திய இராணுவம் வேட்டுத் தீர்க்கின்றது. தப்பிச் சென்ற ஈ. என். டி. எல். எவ். துரோகிகளின் தகவலில் ஜமாலியாவின் அண்மையில் இருந்த லவ் லேன் மெல்ஸ்டோஸ் முகாமிலிருந்த வந்த இந்தியத் துருப்பு கரையிலிருந்து கண்காணிப்புச் செய்தபடி துப்பாக்கி முழக்கம் செய்கிறது.

தோட்டா எட்டாத தொலைவிலே எங்களின் வீரர்களின் இரு படகுகளும் நீரிலே மூழ்கி விட... ஆழக்கடலில் அடிமண வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருந்த சாம்பல்தீவு மக்கள் செய்தி அறிந்ததும் துன்பத்தில் துடித்துப் போனார்கள். திருகோணமலையெங்கும், தமிழீழமெங்கும் செய்தி கேட்டு மக்கள் இமைக்க மறந்தனர். மூடிய விழிகளிலிருந்து நீர்த்துளிகள். ஒரு குஞ்சை இழக்கவில்லை தன் குஞ்சு எல்லாவற்றையுமே இழந்ததுபோல திருமலை மக்கள் ஆறாத்துயரில் ஆழ்ந்து போனார்கள்.

இதில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகளுடன் கப்டன் நேமி, கப்டன் ரகு, கப்டன் குகன், கப்டன் மகேஸ், கப்டன் அன்ரன் ஆகிய இளந்தளபதிகளுடன் .....

# திருமலையின் ஒளி தந்த 22 தீபங்கள்

**திருமலை தந்த இம்மாவீரர்கள் மண்ணை நேசித்தவர்கள். திருமலை மக்களின் நெஞ்சங்களிலே சுதந்திர வீரர்களாய் பவனி வந்தவர்கள். மண்ணுக்காய், மக்களுக்காய் குருதியை நீறாய் இறைத்தார்கள். அதனால் இம்மாவீரர்கள் கடலினில் கரைந்து ஆண்டுகள் மூன்றுக்கு மேலாகியும், தங்களின் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியிலும் திருமலை மக்கள் இவர்களை நினைவு கூரத் தவறுவதில்லை.**



மேஜர் சுரேஸ்

ஓ! எத்தனை கோரமான நிகழ்வு அது. ஜமாலியா என்ற அந்த முஸ்லீம் கிராமத்திலே முகாமிட்டிருந்த தமிழினத் துரோகிகளின் (ஈ. என். டி. எல். எவ். ) முகாமைக் கடல் மார்க்கமாகச் சென்றடைந்த எமது புலிகள் அந்தத் துரோகக் கும்பலைச் சுற்றிவளைத்துத் தாக்க.... எதிர்பாராத தாக்குதல்களாலும், எங்கள் வீரர்களின் அதிவேகமும் கண்டு துரோகக் கூட்டம் ஒரிரு நிமிடங்களிலேயே தங்கள் முகாமை விட்டு தலைதெறிக்க ஓடிவிட...

வெற்றி புலிகளுக்கே என்றானது. நூற்றுக்கணக்கான ஆயுதங்கள், எண்ணிலடங்கா தோட்டாக்கள், ரவைகள் பெரிய வாளிகளிலும், கான்களிலும் தோட்டாக்கள் படகுகளில் ஏறியது. அந்த ஏராளமான சுமைகளோடு இரண்டு படகுகள் தயாராயின.



மேஜர் கமல்

வீரர்கள் வந்த. மூன்று படகுகளில் ஒரு படகோட்டி பயப்பீதியின் காரணமாக காணாமல் போயிருந்தான். அது விதியின் செயலாக இருந்தது. ஏனெனில் ஏராளமான கனத்தின் காரணமாக இரண்டு படகுகளும் நீர் மட்டத்தில் நின்றிருந்தன.

அந்த முகாம் வெற்றியடைந்ததுமே மேஜர் கமல் மூலமாக வெற்றிச் செய்தி எங்களின் மத்திய முகாமை வந்தடைகிறது. உடன் சென்ற மேஜர் மதியும், மேஜர் சுரேசும், 'இன்னும் நூறு புதிய புலி வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் கொண்டு வருகின்றோம்' என வெற்றியின் பெறுமதியைக் குதூகலத்துடன் கூறுகின்றார்கள்.

ஆம்! கமலும், மதியும், சுரேசும் ஏற்கனவே பல ஆயுதங்களை சிங்கள, இந்திய இராணுவங்களிடமிருந்து கைப்பற்றி நூற்றுக்கணக்கான புதிய வீரர்கள் உருவானார்கள். ஒரு ஆயுதம் கைப்பற்றப்படும்போது ஒரு புதிய வீரன் கிடைப்பதாக நினைக்கின்ற புரட்சித்தளபதிகள் அவர்கள். நூற்றுக்கணக்கான ஆயுதங்களை வென்றதும் அவர்கள் நூறு வீரர்களைக் கண்டதாகவே ஆனந்தமானார்கள்.

போடுகின்றவர்கள். நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகளும், மிதி வெடிகளும் செய்கின்றவர்கள்.

கெரில்லா போர் முறையிலிருந்து மெல்ல மெல்ல முன்னேறி; காட்டிலே வீடுகள் கட்டி, பெரிய தோட்டங்கள் செய்து வாகனங்கள் ஓடிவர வழிகள் வெட்டி ஒரு புதிய தேசத்தை கானகத்தில் உருவாக்கி நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு பயிற்சியளித்து, [illegible] வொரு சிப்பாயின் சப்பாத்துக் கால்களும் சிதறுகின்ற மாயத்தைக் காட்டு எல்லையிலே குறி பிசகாது தேடிச் சென்று நேரடியாக மோதுகின்ற புதுயுகத்தை அவர்கள் தினசரியாக்கினார்கள்.

1989ஆம் ஆண்டு தமிழீழ மெங்கும் முதன் முதலாக 'மாவீரர் நாள்' பிரகடனமாயிற்று. மேன்மை தகு வீரத்தலைவர் பிரபாகரனின் ஆசியுடன் எமது வீரர்கள் சாம்பல்தீவு என்ற கிராமத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றார்கள். சாம்பல்தீவு எதிரிகளின் (I. P. K. F - ENDLF) மத்திய முகாம்கள் அமைந்திருந்த கிராமம். திருமலை நகரத்தின் அண்மையில் அமைந்துள்ள பெரிய கிராமம். அன்று முழுவதும் இந்திய டாங்கிகளும், துரோகக் கூட்டமும் எமது வீரர்களுடன் மோதினார்கள். ஆயினும் கொண்டிருந்த இலட்சியம் அன்றைய தினம் வரை குன்றிடவில்லை. சாம்பல் தீவு தோரணங்களாலும் வண்ண வளைவுகளாலும் ஜொலிக்க, ஒலிபெருக்கி வீரர் புகழ் பாடியது. எங்களின் வீரர்கள் சளையாது சண்டையிட்டு அன்று முழு நாளும் சாம்பல்தீவை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். இப்படியான வாழ்வின் மறைக்கமுடியாத சாதனைகள் எல்லாம் படைத்த அந்த மறவர்கள் ஒரு பெரிய சாதனையை வென்றெடுத்து வரும் வழியிலே பிரிந்தார்கள். எம்மை விட்டுப் பிரிந்தார்கள். அவர்கள் வெற்றியுடன் வருகின்றார்கள் என்று அறிந்ததுமே சாம்பல்தீவுக் கிராமம் மகிழ்ந்ததும்; பின் அவர்கள் ஆழ் கடலில் உறைகின்றது, தெரிந்ததும் இருண்டதும் .... இன்றைக்கும் மறைக்கமுடியாத நினைவு.

சாதனை படைத்தவர்களை தன் கொடிய பேரலைகளால் கொன்று சாதனை படைக்க; கொடிய போன்ற தேசத் துரோகிகள் தாங்களும் இந்தியக் கப்பல்களில் ஏறி; தப்பியோட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.

இந்தத் துரோகிகள் தப்பிச் செல்ல இருக்கின்ற அந்த ஓரிரு நாட்களில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகள் ஆழக்கடலில் பயணித்து ஜமாலியா கடற்கரையிலே தரையிறங்கினார்கள். கரையிலிருந்து சுமார் ஐங்க நமட நடை தூரத்திலிருந்த ஈ. என். டி. எல். எவ். துரோகிகளின் முகாமை புலிகள் சுற்றிக் கொள்ள சுமாராக ஐந்து நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சியடைந்துவிட அந்த முகாமின் உள்ளிருந்த மிக ஏராளமான ஆயுதங்களையும் எண்ணிலடங்கா ரவைக் கேன்கள், பைகள், ரவைக்கூடுகளையும் சுமந்து கரையை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

கரையில் இரண்டு படகுகள் மட்டுமே நிற்கின்றன. ஆம் ஒரு படகோட்டி பயப்பீதியில் படகோடு போய்விட்டான். இது விதியின் முதற்படி. எமது வீரர்கள் இரண்டு படகுகளிலும் ஆயுதங்களை ஏற்றி முடிக்கின்றார்கள். படகுகள் பாரத்துடன் கடலில் மிதக்கின்றன. அடுத்தடுத்து ஒவ்வொருவராக படகில் ஏறுகிறார்கள். படகு புறப்படுகின்றது. கரையில் இருந்து ஐந்து நிமிட தூரம் படகிரண்டும் அசைந்தாடிச் செல்கின்ற நேரத்தில் திடீரென பெரும் அலைகளோடு பேரலைகள் ஆர்ப்பரிக்க ஆரம்பிக்கின்றன. அது ஒரு



மேஜர் மதி

எதிர்பாராத நிகழ்வு. படகுகளினுள் நீர் நிரம்பி விடுகின்றது. எட்டாத தூரத்தில் கரை தெரிகின்றது. போக வேண்டியது ஏராளமான தூரம். படகுகள் நீரினுள் அமிழ்கின்றன.

லிலே கன பாரங்களுடன் மூச்சுக்குப் போராடி மாண்டனர் சிலர்; இனி முடியாது என்றறிந்து சயனைட் குப்பியை வாயில் மென்று மடிந்தவர்பலர்... ஆயுதங்களைப் பிள்ளையென்றும் தாயென்றும் மார்போடு அணைத்துக் கொண்டு சுவாக்க மறந்தவர்களும் பலர்.

நெஞ்சங்களிலே சாதனையால் படைத்த வெற்றிகளின் அந்த [illegible] மூச்சை அள்ளித் தந்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

ஆனால் அவர்கள் ஒரு காவியத்தை இறுதி நேரத்திலும் வென்று வந்துதான் வீரச்சதியில் சாய்ந்தார்கள். அவர்கள் சாகின்ற கடைசி நேரத்திலும் ஒரு பெரிய வெற்றியை ஈட்டிய மகிழ்வுடன்தான் கடலில் உயிர் விட்டார்கள்.

அந்த நிகழ்விலே உயிர் துறந்த ஒரு வீரனின் தாய் "என்னுடைய மகன் கடலில் செத்ததுக்கு நான் வருந்தவில்லை. அவன் வீரனாகச் செத்திருக்கிறான். அதனால் நான் பெருமையடைகின்றேன்" என்று அந்த வீரனைப் பெற்றவள் கூறினாள். அந்தத் தாய்க்கு இனிமேல் புலி வீரர்கள் ஒவ்வொருவரும் தன் பிள்ளையாகவே தெரியும்.

வெற்றியுடன் புலி வீரர்களை

லெப். கில்பர்ட், இரண்டாம் லெப். கிருபன், இரண்டாம் லெப். நவா, இரண்டாம் லெப். அசோக், இரண்டாம் லெப். சங் [illegible] வீர வேங்கை குமார், வீரவேங்கை விஜி, வீரவேங்கை கருணா, வீரவேங்கை சின்னமதி, வீர வேங்கை சின்ன சுரேஸ், வீர வேங்கை காந்தி, வீரவேங்கை பைரவன், இரண்டாம் லெப். சாந்தன் போன்ற வீரர்களும் கடலிலே கரைந்தார்கள். இவர்கள் இந்த மண்ணை நேசித்தவர்கள். மண்ணுக்காகக் குருதியை நீராய் இறைத்தவர்கள். கடைசி நேரமும் காவியம் படைத்த சாதனையாளர்கள். அவர்கள் மீட்கத் துடித்ததேசம் .... அவர்களின்றி விக்கித்து நிற்கின்றது. மண் ஒரு நாள் மீட்கப்படும். அன்றுதான் இந்த வீரர்களின் கனவு நனவாகும். அவர்கள் இப்பொழுதும் அந்த மண்ணில் காவலர்களாகவே உலா வருகின்றனர். ■

**-திருமலை மக்கள் -**

## சிங்கள இராணு...

டுமல்ல கடன்களைப் பெறுவதற்காக உறுதி, வீட்டுப்படம் போன்றவற்றை வங்கிக்குக் கொடுத்தவர்களுக்கு கடன் வழங்கப்படவில்லை. அதே வேளை அவர்களது முக்கிய ஆவணங்கள் பலவும் எரிந்து விட்டன.

இதன் போது மக்கள் வங்கி பாதிக்கப்பட்வர்களுக்கு இதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க தவறி வருகிறது. இரண்டு வருடங்கள் ஆகியும் மாங்குளம் மக்கள் வங்கி எதுவித பதிலும் அனுப்பி வைக்காததினால் மக்கள் மத்தியில் விசனம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

சிறிலங்கா இராணுவம் இம்மாவட்டத்தில் தமிழர்களது பாரம்பரியங்கள். பொருளாதாரங்கள், கலை கலாசாரங்களை அழிக்கும் நோக்கிலே திட்டமிட்டு செயற்பட்டு வருவது கண்கூடு. அரசின் கெடுபிடியில் இருந்து தப்பித்துக் கொண்டவை எது வென்று எண்ணிப்பார்த்தால் எதுவுமே மிச்சமில்லை என்று தான் பதில் வருகிறது. சாதாரண நிலையின் போது இந்த மாவட்டத்தை அவதானித்தவர்கள் மீண்டும் இப்போது சுற்றிப் பார்த்தால் அதன் வேதனை அவர்களுக்குத்தான் புரியும்

மாங்குளம், ஒட்டுசுட்டான் கிராமப்பகுதிகளை இன்றும் பார்த்தால் மயானமாகவே காணப்படுகிறது. இந்தமாவட்டத்தை பலர் வளர்க்க அணுஅணுவாக பாடுபட்டவேளையில். அரசாங்கம் குண்டுகளை வீசி வீசி இந்த மாவட்டத்தை சின்னா பின்னமாக சிதறி, சீர்குலைய வைத்துவிட்டது. வன்னியிலே முன்னர் மிருகவேட்டை நடப்பதுதான் வழக்கம். ஆனால் இந்திய, சிறிலங்காப் படைகள் மனித வேட்டையாடினார்கள்; ஆடுகின்றார்கள். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்மநாதன் கேதீஸ்வரநாதன்

# பசியல்ல தாகம்



சிறு கதை

"அம்மா... அம்மா"
அந்தக் குரல் சற்று வித்தியாசமாக ஒலித்தது. வீட்டில் அதை யாரும் கவனித்ததாக தெரியவில்லை. வீடு காலை நேரத்தின் பரபரப்பில் இருந்தது. பையன் மீண்டும் ஒரு முறை குரலெழுப்பினான். இப்போது வீட்டின் முன்பக்கம் ஆட்கள் தோன்றினார்கள். அந்த வீட்டுக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும். தங்கள் வேலைகளுக்கு புறப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

"என்னப்பா, இண்டைக்கு மோட்டார் சைக்கிளை வெளியே எடுக்கயில்லையே... ஏன் ஏதாவது பழுதோ?" அந்த வீட்டுப் பெண் தன் கணவரிடம் கேட்டா.
"இல்லையப்பா ஒரு பழுதும் இல்லை. மண்ணெண்ணை எல்லோ நூற்றி ஐம்பது ருபா விக்குது... ". அவர் பதிலளித்தார். அவர்கள் இன்னும் அந்தப் பையனைக் கவனிக்கவில்லை. அவன் அவர்களையே கவனித்துக் கொண்டிருந்தான். முதலில் பையனை கவனித்தது அந்த வீட்டுக்குழந்தை தான். அது பெற்றோருடன் வெளிக்கிட்டு நேர்சறிக்கு போவதற்குத் தயாராக வாசலில் நின்று கொண்டிருந்து.

"அப்பா.. " என்று கூப்பிட்டு, தெரு வாசல் நோக்கி கையை காட்டியது.
"என்னடாப்பா என்ன வேணும்" சற்று அலட்சியமாகக் கேட்டார்".
'இரண்டு நாளா சாப்பிடயில்லை. சரியாப் பசிக்குது" பையன் மெதுவாகச் சொன்னான்.
"ஏன்டாப்பா கைகால் ஒழுங்காகத் தானே இருக்கு எங்கையாவது வேலை செஞ்சு சாப்பிடுறது தானே" சற்று உரத்துச் சொன்னார். மோட்டார் சையிக்கிள் புதிதாக இருந்தாலும் ஓடுவதற்கு மண்ணெண்ணை வேண்டுமென்று புரிந்த மனிதருக்கு பையனுக்கு கையும் காலும் மட்டும் இருந்தால், வேலை செய்து விடலாம் என்று எப்படி தோன்றியதோ.

"வீட்டுக்குள்ள ஆச்சி இருக்கிறா, கேள் ஏதாவது தருவா எங்களுக்கு நேரம் போச்சு" சொல்லிவிட்டு அந்தப் பெண் கணவனையும் பிள்ளையையும் அவசரப்படுத்தியது. பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருந்த பிஸ்கட்டினை இரண்டாகப் பிரித்து நடுவில் இருக்கும் இனிப்பினை அவசரமாக நக்கிவிட்டு, மிச்சத்தை தூக்கி எறிந்து விட்டு, சைக்கிள் பாரில் ஏறிக்கொண்டது. எங்கிருந்தோ மூன்றுகாக்கைகள் பறநது வநது, இரண்டு ஒவ்வொரு பாதி பிஸ்கட்டினை தூக்கிச் செல்ல ஒன்று ஏமாற்றத்துடனும் பறந்து சென்றது. அவர்கள் மூன்று பேரும் சென்று விட்டனர். பையன் தெரு வாசலிலிருந்து இப்போது முற்றத்திற்கு வந்திருந்தான்.

அவனுக்கு பத்துப் பன்னிரண் டு வயதுக்குள் தான் இருக்கும். வயதுக்கேற்றவாறு வாட்டசாட்டமாகத் தான் இருந்தான். ஆனால் களைப்பு முகத்தில் தெரிந்தது. உண்மையில் நடப்பதற்கே கஸ்டப்படுகின்றான் என்று பார்க்கும் போது புரிந்தது. முகத்தில் களைப்புடன் கவலையும் தெரிந்தது. அவனுடைய அளவிற்கு பெரிதான ஒரு காற்சட்டையும், சற்று சிறிதான ஒரு சேட்டும் அணிந்திருந்தான். உடுப்புகள் சற்று அழுக்கேறி இருந்தது. தலையில் புழுதி அப்பிக்கிடந்தது.

பையனை யன்னலுக்குள்ளால் கண்டதும், ஆச்சி குசினியில் இருந்து வெளியே வந்தா. மீண்டும் ஒரு தடவை பையன் பசியை பற்றி சொல்லவேண்டி இருந்தது. பையனுடைய நல்ல காலம் ஆச்சி புத்திமதி எதுவும் சொல்லவில்லை. அவவின் வயதின் அனுபவமோ, இரக்கக்குணமோ என்னவோ பையனின் தோற்றத்தில் இருந்து, அவன் பொய் சொல்லவில்லை என்று புரிந்து கொண்டா.

"கொஞ்சம் பொறு பாண் இருக்கு. கூடச் சாப்பிட ஒண்டும் இல்லை. மத்தியானத்திற்கு எண்டுவைக்கிற கறியோட தாறன் " அவனுக்கு இருந்த பசியில் வெறும் பாணே கேட்டு வாங்கிச் சாப்பிட்டு இருப்பான். அவனுக்கு இந்த பழக்கம் புதியது. அதனால், இனிமேலும் அவசரப்பட்டுக் கேட்பது சரியல்ல என்று வாசலில் உட்கார்ந்து விட்டான்.

அவனுக்கு இப்போது பசியுடன், அப்பு பற்றிய எண்ணங்களும் கவலையை கொடுத்தன. அவனுக்கு இன்னும் அப்பு பற்றி எந்த தகவலும் கிடைக்கவில்லை. இரண்டு தினங்களுக்கு முன்னர் நடந்த சம்பவங்களை எண்ணிப்பார்த்தான். அன்று இரவு படுத்து ஒரு மணித்தியாலம் தான் இருக்கும் திடீரென்று சீறி வந்த பொம்பர்களும், காதைப் பிளக்கும் ஓசையுடன் விழுந்து வெடித்த செல்களும், சூட்டுச் சத்தங்களும்... அப்பப்பா இப்ப நினைத்தாலும் அனுக்கு மேனி நடுங்கியது. " ஆமி வெளிக்கிடுகிறானாம். எல்லோரும் ஓடுங்கோ" என்ற குரலுடன் சனத்துடன் சனமாக வெளிக்கிட்டவன் தான். இரவு இரவாக நடந்து வந்து களைத்துப் போனவனை ஒருவரும் கவனிக்கவில்லை. மற்றவர்களுக்குத் தங்கள் தங்கள் பிரச்சனைகள், வீட்டை விட்டிட்டு வெளிக்கிட்டது, வீட்டிலுள்ள பொருட்கள் தவற விடப்பட்ட ஆக்கள், ஆடு, மாடு, கோழி, தோட்டம் என்று எத்தனையோ. இவற்றுடன் அவனைக் கவனிக்க ஒருவருக்கும் முடியவில்லை. அவனும் சின்னபொடியன் தானே. எங்கே போறது எங்கு பதியிறது. ஒன்றும் புரியவில்லை. பள்ளிக்கூடம், கோயில் என்று அலைத்து விட்டு இப்ப இங்கு வந்து நிற்கிறான்.

அவன்ர அப்பு கோயிலில் ஐயருக்கு எடுபிடி வேலை செய்கிறவர். கோயிலில் விளக்குத் துடைப்பது, கூட்டுவது, கடைக்கு போவது இப்படி எல்லா வேலையும் செய்வான். திருவிழா, அபிசேகம் இப்படி ஏதுவும் விசேட தினங்கள் என்றால் வேலை அதிகம் இருக்கும். இவனும் கூடமாட ஒத்தாசை செய்வான். கோயிலும், கோயில் வீதியும் தான் அவனுக்கு வீடு. ஐயருக்கும் இவனில் நல்ல பிரியம். ஏதோ ஓகோ என்று இல்லாவிட்டாலும் சாதாரண வருமானம் வரும். கோயில் அவனுக்கும், அப்புவிற்கும் உணவிற்கோ மற்றைய செலவுகளுக்கோ கோயிலில் இருந்து கிடைப்பது போதுமானதாக இருந்தது. அப்பு கோயில் வேலை எல்லாம் முடித்துவிட்டு லேற்றாகத்தான் படுக்க வருவார். அன்றைக்கும் அப்படித்தான். அவன் படுக்கப் போகும்



வரைக்கும் அப்பு வரவில்லை. சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழும்பிப் பார்த்தால் அப்பு பக்கத்தில் இல்லை. கொஞ்ச நேரம் என்ன செய்வது என்று தெரியாமல் நின்று முழுசினான்.

"ஏண்டா நிற்கிறாய்... ஓடடா.. " என்று மற்றர்வர்கள் கத்திக் கொண்டு போவதைக் கேட்டு வெளிக்கிட்டுவிட்டான். அப்பு கூட சொல்லியிருந்தவர், 'ஏதும் பிரச்சனை வந்தால் என்னைப்பார்த்துக் கொண்டு நிக்காதை. நீ போநான் வந்துவிடுவேன்' என்று. 'ஐயரும் அப்புவும் எங்கேயெண்டாலும் வெளிக்கிட்டுதான் இருப்பினம்.' ஒருவாரு தன்னைத்தானே சமதானப்படுத்தி கொண்டு காத்திருந்தான்.

அவனுடைய சிந்தனையை 'கிறீச்' என்ற கதவு திறக்கும் ஓசை கலைத்தது. வாசலைப் பார்த்தான். முதலில் தனக்கு போட்டியாக யாராவது வந்து விடுவினமோ என்று பயந்த அவன், கையில் பேப்பருடன் வரும் பேப்பர் காரனைப் பார்த்ததும் ஆறுதல் அடைந்தான். பேப்பர்க்காரனை கண்டதும் ஆச்சி வெளியே வந்தா. "என்ன இன்டைக்கு லேட்டா வாறாய். விடிய பேப்பரை காணலை" என்று சத்தம் போட்டுட்டு, " இப்பத்தான் போகினம். வழியிலை அம்மா சையிக்கிள் பழுதாய்போச்சு " சொல்லிக்கொண்டு பேப்பரை நீட்டினான். ஆச்சி பேப்பரை வாங்கிக்கொண்டு, "இன்னும் பத்து நிமிசத்தில் முடிச்சிட்டு தாரன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனா.

மீண்டும் அமைதி வர ஏதோ சிந்தனையில் இருந்த அவனை, உள்ளே திடீரென பேப்பர் வாசிக்கும் குரலும் அதில் தங்கள் ஊரின் பெயர் அடிபடுவதும் ஈர்த்தது. குசினிக்குள்ளே இரண்டு வயதான பெண்கள் போலும். மற்றவ ஆச்சிக்கு பேப்பர் வாசித்துச் சொல்ல ஆச்சி தேங்காய் திருவிக்கொண்டிருந்தா.

"....பொம்பர் தாக்குதல், செல் வீச்சு. எட்டு பொதுமக்கள் பலி. புலிகள் இராணுவம் கடும்மோதல் " என்ற செய்தி கேட்ட பையன் சிந்தனை கலைந்தது. ஆவலாகமேலும் என்ன வாசிக்கினம் என்று எழுந்து நின்று கேட்டான்.

"செத்த ஆட்களின்ர பெயர் போட்டிருக்கே?" ஆச்சி ஆவலாகக் கேட்ட, யாரோ தெரிந்தவர்கள் அந்த ஊரில் இருக்கினமாம். "ஓம்" என்று சொல்லிவிட்டு, மற்றவ மிச்சத்தையும் வாசிக்கத் தொடங்கினா. முதலில் ஐயரின் பெயர்தான் இருந்தது. பையனுக்கு அந்த அதிர்ச்சியில் இருந்து மீளுவதற்குள் அப்புவின் பெயரும் கேட்டது. பெயருடன் வயதும் போட்டிருந்தது. பையனுக்கு சந்தேகம் இன்றி நடந்ததை உணர்த்தியது.

"பார்த்தீங்களோ, வயதுவந்தவர்களையும் எல்லாம் சுட்டியிருக்கிறான்கள். இஞ்ச வந்தாலும் என்னை உங்களையெல்லாம் கூடவிடமாட்டாங்கள்". ஆச்சியின் குரலில் பயமும், கவலையும் தெரிந்தது. மேலும் தங்கள் கோவிலடி வரை இராணுவம் முன்னேறியிருக்குது என்றும் அறிந்து கொண்டான்.

அவனுக்கு கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. ஆனால் அவன் அழவில்லை. பசி கூட மறந்துவிட்டிருந்தது. அப்பு, ஐயர் எல்லாம் கண்முன் வந்து போனார்கள். அப்புவிடம் அடிவாங்கியதும், அப்பு கோவில் வெள்ளைச்சாதம் ஊட்டிவிட்டதும் வந்து போனது. தான் வெளிக்கிடுவதற்கு இரண்டுதினங்களுக்கு முன்னர் தான் பட்டம் வாங்க ஐயர் ஐந்து ருபாகாசு தந்தது ஞாபகம் வந்தது. தாங்கள் ஓடிப்பிடித்துவளையாடும் கோவில் வீதி. குளித்து கூத்தடிக்கும் கோவில் கேணி, மாங்காய் ஆயும் மாமரம் எல்லாம் கண்முன்னே தோன்றி மறைந்தது.

அந்தக் கோவிலடியில் எல்லாமாக இவன் வயதையொத்த ஏழெட்டுச்

***தொடர்ச்சி 15ம் பக்கம் ....***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்பாறை மாவட்ட அகதி முகாம்களில் தமிழ் மக்களின் அவலநிலை

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் யுத்தம் ஆரம்பமாகி இன்றைக்கு மூன்றாவது வருடத்தை எட்டிக் கொண்டிருக்கின்றது. இடைப்பட்ட கால எல்லைக்குள் அம்பாறைப் பிராந்திய மக்கள் படும் அவலநிலையை நாம் காணக் கூடியதாகவுள்ளது.

பொத்துவில் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் யுத்தம் ஆரம்பமானதும் கோமாரி எனும் ஊரில் வந்து தஞ்சமடைந்தனர். தெரிந்தோரின் வீடுகள், பெரிய மரநிழல்கள், இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. ஓரிரு மாதங்களின் பின்னர் இவர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கங்களும் அரச நிவாரணமுமாக ஓரளவு உலர் உணவுப் பொருட்கள் கிட்டியது. **இராணுவத்தின் மிரட்டல் காரணமாக குடும்பத்தினர் தங்கள் 10 வயது மதிக்கத்தக்க ஆண்பிள்ளைகளை இராணுவத்தினருக்கு ஆயிரம் ரூபாய்க்கு விற்கின்றனர்.**

இராணுவத்தின் வற்புறுத்தலினாலும் தங்கள் பிள்ளைகளை தங்களுடன் வைத்திருப்பதால் புலியெனக்கூறி அழைத்துச் சென்று கொன்றுவிடுகின்றார்கள் இராணுவத்தினர் என்பதாலும் இப்பரிதாப நிலைக்கு ஆளாக்கப் படுகின்றார்கள் கோமாரியில் வாழ்ந்துவரும் பொத்துவில் அகதிகள்.

இவர்களுக்குத் தொழில் இல்லை. வேளைக்கு சாப்பிட முடியாத அவலநிலை. இதனால் இராணுவ முகாம்களுக்கு இராணுவத்தினர் இவர்களை அழைத்துச் சென்று இடம் துப்புரவு செய்வது, கிடங்குகள் வெட்டுவது, அரண்கள் அமைப்பது ஆகிய வேலைகளை செய்வித்து வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தினரால் அகதிகளுக்கு கோமாரியில் சிறு சிறு கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட சூறாவளியினால் இக் கொட்டில்கள் அனைத்தும் காற்றோடு காற்றாய் போய்விட்டது. இந்நிலையில் பெண்கள், குழந்தைகள், வயது முதிர்ந்த பெரியவர்கள் அனைவரும் கோமாரியில் உள்ள சிறிய பாடசாலையை நாடியுள்ளனர்.

அண்மையில் சிறீலங்கா அரசால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவுப் பொருட்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இராணுவ உயர் அதிகாரியைக் கேட்டபோது உங்களுக்கு எந்தவிதமான பிரச்சனையுமில்லை. பாதுகாப்பை நாங்கள் தருவோம், நீங்கள் பொத்துவிலில் சென்று குடியமரலாம் என்றனர். இப்பிரச்சனைக்குத் தீர்வு இன்றேல் நாங்கள் பொத்துவில் செல்ல மாட்டோம் என பதில் கூறியுள்ளனர் பொதுமக்கள்.

**அண்மையில் மூன்று இளம்பெண்கள் விறகு எடுப்பதற்காகப் பக்கத்திலுள்ள சிறிய காட்டினுள் சென்றுள்ளார்கள். இவர்களின் வருகையை எதிர்பார்த்த இராணுவத்தினர் பற்றைக்குள் மறைந்திருந்து இம் மூன்று பெண்களையும் வாயைப்பொத்தித் தூக்கிக் கொண்டு சென்று அந்த மூன்று பெண்களையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். பெண்களின் பெற்றோர்கள் இதுசம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்கத்திடம் விபரம் எடுத்துச் சொல்லி இராணுவத்தினரிடம் கேட்டபோது அப்படித் தாங்கள் செய்யவில்லை என இராணுவத்தினர் பதிலளித்தனர்.**

அக்கரைப்பற்று வாழ் மக்களைப் பொறுத்தவரையில் இம்மக்கள் இரண்டு பக்கத்தில் துன்பப்படுத்தப்படுகின்றார்கள். சிறீலங்கா இராணுவத்தின் அட்டூழியங்களினாலும், அக்கரைப்பற்று வாழ் முஸ்லீம்கள், முஸ்லீம் ஊர்காவல்படை, முஸ்லீம் ஜிகாத் படைகளின் சித்திரவதை, அதட்டல்களினாலும் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பகுதி மக்கள் அக்கரைப்பற்று கடைகளுக்குச் சென்று பிஸ்கட்டுகள் ஏதாவது வாங்க வேண்டுமாயின் முன் வாங்கிச் சென்ற பிஸ்கட்டுக்களின் மேலுறையைத் தரவேண்டும். இல்லையேல் அந்த பிஸ்கட் பெட்டியை புலிகளுக்கு வாங்கிக் கொடுத்தவர்கள் என்ற குற்றம் கடைக்காரரால் சாட்டப்பட்டு அவர்கள் ஆண், பெண் யாராக இருந்தாலும் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள். அதன் பின் அவர்களை இராணுவம் விசாரணை செய்கின்றது. பிஸ்கட் பெட்டியின் மேலுறையைக் காட்டித் திரும்ப பிஸ்கட் பெறலாம் என இராணுவ உயர் அதிகாரி பொதுமக்களிடம் கூறியுள்ளார்.

இவற்றை எல்லாம் கடந்து இவர்கள் பிஸ்கெட் வாங்கி தங்கள் இல்லம் செல்லும் வேளையில் இதனைக் கிராம வீதிகளால் வரும் இராணுவத்தினர் கண்டு அவரை விசாரித்துவிட்டு இச் சம்பவத்திற்குரியவர் பெண்ணாக இருந்தால் சோதனை ஒன்றும் செய்து பார்க்கின்றனர். அப்பெண்ணின் முதுகில் துப்பாக்கியை வைத்து விண்ணை நோக்கிச் சுடுகின்றனர். அப்போது அப்பெண் பயந்தால் உண்மையானவர். பயமின்றி அப்பெண் சிரித்தபடி நின்றால் இப்பெண் புலியுடன் தொடர்புடையவர் என்பது இராணுவத்தினரின் முடிவு. இதன் பின் பல கேள்விகளைக் கேட்டு விசாரணை தொடர்கிறது. அதன்பின் விடுதலையும் கிடைக்கலாம். கைதும் இடம் பெறலாம்.





தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பொதுவான ஓர் இடத்தில் தான் அக்கரைப்பற்று பேருந்து நிலையம் இருந்தது. இது முஸ்லீம்களுக்கு பாதுகாப்பு அற்ற இடம் எனக்கருதி அதனை முஸ்லீம்கள் வாழுகின்ற பகுதிக்குள் ஏற்படுத்தியுள்ளனர். இதனால் தமிழ் மக்கள் பயத்துடன் பேருந்து நிலையத்தை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

அதுமட்டுமன்றி தமிழ்ப்பகுதியில் காலம் காலமாக இருந்து வந்த மின்மாற்றிக் கருவியை முஸ்லீம் பிரிவுக்குள் கொண்டு சென்றுள்ளனர். இதனால் சிலவேளைகளில் தமிழ்ப்பகுதிகளில் மின்துண்டிப்பும் செய்யப்படுகின்றது. **அண்மையில் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரிக்கப்பட்டதில் முஸ்லீம்களின் எல்லைகள் தமிழ்ப் பகுதியை ஊடறுத்து சாரதா படமாளிகை வரை சேர்க்கப் பட்டுள்ளது. இது வாக்காளர் தொகையைக் குறைப்பதற்கு முஸ்லீம் உதவி அரசாங்க அதிபரின் சதிவேலைகளில் ஒன்று.**

ஆண்டாண்டு காலமாகப் பொத்துவில் பாணமையில் தமிழ்ப்பள்ளிக்கூடம் இருந்துவந்தது யாவரும் அறிந்த ஒன்று. புலிகள், சிறீலங்கா அரசு போரின் பின் பாணமையில் வாழ்ந்த தமிழ்க் குடும்பங்கள் அனைத்தும் அகதிகளாக வந்து கோமாரியில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

பாணமையில் தமிழ்ப் பிள்ளைகள் படித்துவந்த தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் இன்று இரண்டாயிரத்து ஐநூற்றிற்கும் (2500)மேற்பட்ட சிங்கள மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். அது மட்டுமல்ல உயர்தர வகுப்புக்களும் உண்டு. சிங்களக் குடியேற்றம் மிக மும்முரமாக நடைபெற்று வருகின்றது என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

## கல்முனை அகதி முகாம்கள்

கல்முனை அகதி முகாம்களில் சவளக்கடை, 4ம்கொலனி, சென்றல்காம்ப், சொறிக்கல்முனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றார்கள்.

இவர்கள் அன்றாடம் தொழில் செய்ய மிகவும் கஸ்டத்தின் மத்தியில் இருக்கின்றார்கள். அரச நிவாரணப் பொருட்களும் கிடைப்பது அரிதாகிவிட்டது. இதேநேரம் அடிக்கடி முகாம்கள் இராணுவத்தினராலும், முஸ்லீம் காடையர்களாலும் சுற்றி வளைக்கப்படுகின்றது. கைது செய்யப்படுவோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுகின்றார்கள். சந்தேகத்திற்கு உரியவர்கள் எனக்கருதப்படும் இளைஞர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்று கையொப்பமிட்டு வரவேண்டும். இதேநேரம் மேற் குறிப்பிட்டுள்ள கிராம மக்களின் வயல் நிலங்களை முஸ்லீம்கள் தங்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றார்கள். அக்கிராம மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டு அதிலுள்ள பொருட்கள் யாவையும் முஸ்லீம் காடையரால் கொள்ளையிடப்பட்டுள்ளது.

## காரைதீவு அகதி முகாம்கள்

வீரமுனை, சம்மாந்துறை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, நெல்லிவட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காரைதீவு அகதி முகாம்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் வீரமுனை, சம்மாந்துறை, வாழ் மக்கள் இராணுவத்தினதும், திவ்வியநாதன் எம்.பி.யின் பலாத்காரத்தினாலும் வீரமுனையில் சிறுசிறு குடில்கள் அமைத்து பயத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தங்கள் தங்கள் கிராமங்களுக்குட் சென்று குடியேறினால்தான் அரசால் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் கிடைக்கும் . குடியேற மறுப்பவர்களுக்கு கிடையாது என காரைதீவு இராணுவ அதிகாரியும், திவ்வியநாதன் எம்.பி.யும் கூறியதனால்தான் அக்கிராம மக்கள் அம்முடிவுக்கு வந்தனர். இருந்தும் ஏனைய கிராம மக்கள் அவர்களின் இடத்திற்கு செல்ல மறுத்துவிட்டனர். இவர்கள் இரவு, பகல் எந்த நேரமுமின்றி முஸ்லீம்களின் பயமுறுத்தல்களின் மத்தியில் வாழ்கின்றனர். ■

# புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே

வளவை வளவன்

வங்கக்கடலும் வளர் தமிழீழமும்
செந்திரு வானாய் ச்சிவந்து போனது
எங்கள் வாழ்வும் எம்முயிர் உடலும்
இங்கு அனலிடை மூழ்கி எழுந்தது.

சிங்கள மென்றொரு தேசத்து ஈனர்கள்
எங்கள் பகைவராய்தம்மையே மாற்றினர்
எங்கும் படைவிரி த்தெம்மை அழித்திட
கங்கணம் கட்டி க்கனலினில் வீழ்த்தினர்.

பிஞ்சு பூவொடு குஞ்சுகள் கூடினர்
அஞ்சிடா தவர் கொட்டம் அடக்குவோம்
எங்கள் தாயக மண்ணினை மீட்டிட
எங்கள் பகையது எங்கெனத் தேடினர்.

தணலேந்தி நின்றாலும் நீராக ச்சென்றார்
கனல்மூட்டி வைத்தாலும் அலையாகி ப்போனார்
கனவிற்குள் எமைவென்ற பகைவர் தன் நிலைமாற
கனவிற்கு வழியின்றி த்தூக்கம் கெடுத்தார்.

கிலிகொண்டு எதிராளி படைவிட்டு ஓட
புலிவீரர் நிழல்மட்டும் தொடராகச் செல்லும்
கெரில்லாப்போர் புதியதொரு பரிமாணம் காணும்
உலகத்தின் திசைஎங்கும் தமிழீழம் ஈர்க்கம்

உலகாளும் புதுவதன திருவுறையும் காட்சி
அலகாகும் வரலாற்றின் புதுயுகத்து உத்தி
மலரான திருமனதில் உரமேற்றி வைத்தோன்
பலமான தலைவனென வரையறைகள் பூக்கும்

ஈகத்திலே உயர்தீரத்திலே மனமோகத்திலே -எழு
வேகத்திலே புயல் கோபத்திலே எரி
தாகத்திலே தமிழீழமென்னும் உயர் வேதத்திலேநறு
போதந்தரும் புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள இராணுவத்தின் அரக்கத்தனத்தால் பொன் விளையும் பூமி பொலிவிழந்தது

முல்லைத்தீவு மாவட்டம் ஒரு வளரும் மாவட்டம். முன்னர் வவுனியா மாவட்டத்துடன் இணைந்திருந்த இந்த மாவட்டம் பின்னர் தனி மாவட்டம் ஆனது. வன்னி மாவட்டங்களில் இந்த மாவட்டமே வளர்ச்சி குன்றியதும், வயதில் குறைந்ததுமான ஒரு மாவட்டம். இந்த மாவட்ட மக்கள் விவசாயத்தையும், மீன்பிடிப்பதையுமே தமது சுயதொழிலாகக் கொண்டவர்கள். - அரச உத்தியோகம் செய்பவர்கள் விரல் மடித்து கணக்கிடக்கூடியவர்களே இருக்கின்றனர் எனலாம்.

இந்த மாவட்டத்தின் கண்களாக முத்தயன் கட்டு, வவுனிக்குளம், ஆகிய இரு அணைக்கட்டுக்கள் இருக்கின்றன. இந்த இரண்டு ஜீவ ஊற்றுக்களைப் பயன்படுத்தி முன்னைய காலங்களில் த்தில் நெல் வேளான்மை செய்கை பண்ணப்பட்டு விளைகின்ற நெல் இந்த மாவட்டத்தின் தேவையைப் பூர்த்திசெய்து மற்றய மாவட்டங்களுக்கும் வழங்கி வந்தது. கடல் வளமும் அப்படித்தான். கடலில் பெறப்படும் மீன் வகைகள், இறால் போன்றவற்றை வட மாகாணதிற்குப் பயண்படுத்தி மிகுதியானவை தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். இந்த இரண்டு தொழிற்பாடுகளாலும் இந்த மாவட்டத்தில் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது குடும்ப வாழ்வை வளம்படுத்தினர். ஆனால் இன்று அரசின் பொருளாதார அழிவு இராணுவத்தின் கெடுபிடிநிலைகளால் இப்பகுதி மக்கள் தமது சுயதொழிலை இழந்து அபாயகரமான ஒரு இருண்ட வாழ்வில் மூழ்கி வருகின்றர்.

இந்த மாவட்டம் நிறைந்த வளங்



களை கொண்டது. தேன்வளம், மீன் வளம், கடல்வளம், பால்வளம், நெய்வளம், நெல்வளம், தானியவளம், மிருகவளம், பழவளம், போன்ற பலவளங்களைக் கொண்டு இந்த மாவட்டத்தை மெருகூட்டிக்கொண்டு இருந்த வேளை அங்கே ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் சகல வளங்களும் அழிந்து பொசிந்து போகின்ற நிலையில் இருக்கின்றன. அப் பகுதி மக்களும் ஒரு நேரமாவது சத்துள்ள உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அழிந்து இறந்து போகின்ற ஒரு அபாயகரமான நிலையிலேயே இருக்கின்றனர்.

இந்த மாவட்டம் நீண்ட விஸ்தீரணங்களைக் கொண்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் தலைப் பட்டினமாக விளங்குவது முல்லைத்தீவு. முல்லைத்தீவின் பிரதான வாயில்களாக பரந்தன், மாங்குளம், புளியங்குளம் வீதிகள் அமைந்திருக்கின்றன. இந்த மாவட்டம் முல்லைத்தீவின் தெற்கே ஒட்டிசுட்டான், மாங்குளம், துனுக்காய், வவுனிக்குளம், - நாட்டாங்கண்டல், தென்னியங்குளம் ஆகியவையும். கிழக்கே அலம்பிலும், கொக்குளாய், நாயாறு, மற்றும் பகுதிகளையும், மேற்கே புதுக்குடியிருப்பு, விஸ்வமடு, உடையார்கட்டு, தருமபுரம் பகுதிவரைக்கும் மற்றும் நெடுங்கேணி, முருகண்டி பகுதிகளும் இம்மாவட்டத்தில் இணைத்திருக்கின்றன. முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், பாண்டியன்குளம், துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது.

பல வழிகளாலும் இம் மாவட்டம் படிப்படியாக வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அங்கே பலதடவைகள் வெவ்வேறு சம்பவங்களில் சிறிலங்கா அரசின் அட்டூழிய நடவடிக்கைகள், பொருளாதார அழிப்பு நடவடிக்ககைகள் விஸ்வரூபம்

## முல்லை மாவட்டத்தின் துயரம்

எடுத்தல் இம் மாவட்டத்தில் கடைகள் அலுவலக் கட்டடங்கள், ஆலயங்கள், வீடுகள், தனியார் கட்டடங்கள், மீனவ வாடிகள், மீனவ படகுகள் மேலும் வலைகள், மீன்பிடி இயந்திரங்கள், உத்யோகஸ்தர் விடுதிகள், பாடசாலைக்கட்டடங்கள், முல்லைத்தீவு பிரதான ஆஸ்பத்திரி ஆகியவை குண்டுகள் வீசியும், செல் தாக்குதலாலும், தகர்த்தும் நிர்மூலமாக்கப் பட்டன.

இது மட்டுமல்ல முல்லைத்தீவில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் நிர்மூலமாக்கிய வீடுகளிலிருந்து விலைமதிப்பான ரீ. விக்கள், றேடியோக்கள், குளிர்சாதனப் பெட்டிகள், துவிச்சக்கரவண்டிகள், மோட்டார்சைக்கிள்கள் மற்றும் வீட்டின் கதவுகள், யன்னல்கள், கூரைத்தகடுகள், ஓடுகள் போன்றவற்றை தம்வசப்படுத்தி அவற்றை பார்சல்களாக்கி இராணுவ அதிகாரிகளின் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ஏஞ்சிப்போன வீடுகளைத் தமது மறைவிடங்களாகவும், பதுங்குகுழிகளாகவும் மாற்றியுள்ளனர். இராணுவ நடவடிக்கையினால் இம் மாவட்டத்திற்குப் பல கோடிக்கணக்கான சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முல்லைத்தீவில் இராணுவத்தினர் இன்னமும் நிலை கொண்டிருப்பதனால் ஏற்பட்ட சேத விபர மறிப்பீடு பூரணமாக பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இம் மாவட்டத்தில் நான்கு கிராமங்கள் வெவ்வேறு இராணுவ நடவடிக்கையின்போது தாக்குதலுக்கு இலக்காயினதும் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒட்டுசுட்டான் பிரதேசம் திட்டமிட்டு அழிக்கப்பட்டது.

அவ்வழிப்பு நடவடிக்கையின் போது அங்கே பத்து வர்த்தக நிலையங்கள், உத்தியோகத்தர் வீடுகள் ஐந்து, அலுவலகக் கட்டிடம் மூன்று, பத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புக்கள், மற்றும் ஆலை ஒன்றும் அழிக்கப்பட்டன. இன்னமும் அங்கே புனர்நிர்மாணப் பணிகளோ அதற்குச் சமமான நடவடிக்கைகளோ எடுக்க அரசு தவறிவிட்டது.

இதனை அடுத்து அங்கே இயங்கிவந்த அலுவலகங்கள் கிராமப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீளக் குடியமர முடியவில்லை.

**1984ஆம் ஆண்டளவில் கொக்குளாயிலே சிறிலங்கா இராணுவம் திட்டமிட்ட நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து அப் பகுதியிலுள்ள பல ஆயிரக்கணக்கான மக்களை 24 மணி நேரத்திற்குள் வெளியேறுமாறு அவசர பணிப்பை விடுத்தது. இதனால் பீதியுற்ற மக்கள் நெல் மற்றும் விளைந்த சிறு தானியச் செய்கைகள் மற்றும் கால் நடைகள், உடமைகளைவிட்டு வெளியேறினர்.** அவர்கள் இன்னமம் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பமுடியவில்லை. அங்கே ஏற்பட்ட திட்டமிட்ட நடவடிக்கைகளால் இருபத்தைந்து குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டன. ஐந்து வர்த்தக நிலையங்கள், இரண்டு அலுவலகங்கள், இருபத்தைந்து மீனவ வாடிகள், எட்டு பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் வலைகள், வள்ளங்கள், இயந்திரங்களும் அழிந்துபோயின. கொக்குளாயிலிருந்து மீளமுடியாமல் முல்லைத்தீவில் அகதிகளாக இருந்து வந்தமக்கள் முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் மீண்டும் புதுக்குடியிருப்பு, விசுவமடு போன்ற இடங்களுக்கு அகதிகளாகக் குடிபெயர்ந்தனர்.

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது வர்த்தக நிலையங்கள் இருபத்தைந்து, பத்து அலுவலகக் கட்டிடங்கள், இரண்டு ஆலயக்கட்டிடங்கள், பத்து விடுதிகள், பதினைந்து குடியிருப்புக்கள், தனியார் கட்டிடங்கள் ஐந்து ஆகியன அழிக்கப்பட்டன. இப் பகுதிக் கட்டிடங்கள் மீண்டும் செயல்பட முடியாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. மாங்குளம் இராணுவ முகாம் அமைக்கப்



பட்டு மேலும் விஸ்தரிக்கப்பட்டபோது முகாமைச் சுற்றியிருந்த நிலப்பரப்புக்களை இராணுவம் சுவீகரித்தது. அதன் போது இருபத்தைந்து குடியிருப்புக்கள் இடித்து அழித்து நொருக்கப்பட்டன. இதே காலப் பகுதியில் துணுக்காயில் ஏற்பட்டதாக்குதல் ஒன்றின்போது சில வீடுகள் சேதமடைந்தன.

**எம்.கே.யோகரட்ணம்**

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலான இராணுவ நடவடிக்கையின் போது, முல்லைத்தீவு நகரப் பகுதியை ஆக்கிரமித்த இராணுவத்தினர், அப் பகுதியில் நூறு வர்த்தக நிலையங்களையும், இருபத்தைந்து அலுவலகக் கட்டிடங்களையும், இருநூற்றி இருபது வீட்டுக்கட்டிடங்களையும், இருபத்தைந்து தனியார் கட்டிடங்களையும், எழுபத்தைந்து மீனவ வாடிகளையும், எண்பத்தைந்து வீடுகளையும், ஏழு பாடசாலைக் கட்டிடங்களையும், வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் உட்பட மேலும் சில ஆலயக்கட்டிடங்களையும், முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலைக் கட்டிடம், மருந்து வகைகள், படுக்கைக் கட்டில்கள் மற்றும் முக்கிய உபகரணங்கள் பலவும், படகுகள், வலைகள் போன்றவைகளும் நிர்மூலமாக்கப்பட்டன.

முல்லத்தீவை மையமாக வைத்து அண்மித்துள்ள பல கிராமப் பகுதிகளையும் இராணுவம் தன்பிடிக்குள் சிக்கவைத்துள்ளது. முல்லத்தீவு. கரைச்சிக் குடியிருப்பு. கள்ளப்பாடு. முள்ளிவாய்க்கால். அளம்பில், கொக்குளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பகுதிகள் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருப்பதால் தண்ணிமுறிப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தைக் கொண்ட இப்பகுதி கடந்த இரண்டு வருடங்களாக நெல் செய்கையின்றி காடுகளாகவும், தரிசு நிலங்களாகவும் காணப்படுகின்றது. முத்தையன் கட்டு, வவுனிக்குளம் போன்று தண்ணிமுறிப்பும் நீர்ப்பாசன வசதி கொண்ட, இரண்டு முறை வேளாண்மைச் செய்கை பண்ணக்கூடிய நிலப் பரப்பாகும். **சேவையைக் பூர்த்தி செய்து மற்றய மாவட்டத்தின் தேவைக்கும் நெல் வழங்கிய இம் மாவட்டம், இன்று மற்றய மாவட்டங்களிலிருந்து உணவைப் பெற கையேந்தி நிற்கின்றது.**

இராணுவ பிடிக்குள் சிக்கியுள்ள கிராமப் பகுதி மக்கள் நீண்ட காலமாக அகதிகளாகவே இருந்துவருகின்றனர். இவர்களுக்கு சத்துணவு, உரிய மருந்து வகைகள், பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி, நல்ல உடை உறக்கமின்றி கஸ்ட நிலையிலேயே வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இப்பகுதி அகதிகளுக்கு நிறுவனங்களின் உதவிகள் போதாத நிலையால் பலர் பட்டினிச்சாவிலும், நோயின் பிடியில் சிக்குண்டும் அல்லல்படுகின்றனர். இப்குதி மக்கள் தொழில் செய்து வாழமுடியாமல் கடற்படையினர் கடற்தொழிலைத் தடுத்தனர். இராணுவத்தினர் விவசாயிகளுக்கு எரிபொருள், உரம், கிருமிநாசினி, விதைநெல் போன்றவற்றை அனுப்ப மறுத்து வருவதால் இப்பகுதி மக்கள் மேலும் மேலும் மெலிந்து, நலிந்து வருகின்றனர்.

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது பல அலுவலகங்கள் ஸ்தம்பித்தன. அவ்வலுவலகங்களில் இருந்து முக்கிய ஆவணங்கள் மீட்கப்படமுடியவில்லை. பல கோப்புக்கள் முக்கிய ஆவணங்கள் அழிந்தன. மிஞ்சிய கோப்புக்களும் மழை வெள்ளம் உட்சென்று மீதியானவையும் அழிந்துவிட்ட நிலையிலுள்ளன.

ஆனால், இவ் அலுவலகங்ககள் புதுக்குடியிருப்பில் பல வசதிகள் அற்ற நிலையில் செயற்படுகின்றன. **மாங்குளம் , முல்லைத்தீவு வங்கிகளில் அடகுவைத்தவர்கள், அடகை மீட்கபணம் கட்டியவர்களுக்கு இன்னமும் நகைகள் மீளளிக்கப்படவில்லை. கட்டிய பணமும் திரும்பிச் செலுத்தப்படவில்லை. மாங்குளம் மக்கள் வங்கியில் பலரது நகைகள் அழிந்திருக்கின்றன. அது மட்**

*தொடர்ச்சி 10ம் பக்கம் ....*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

## ■ நோர்வே அணி வெற்றி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மூன்றாவது ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கடந்த 10-4-93 அன்று இலண்டன் வூட்கிறீன் பகுதி மைதானத்தில் நடைபெற்றது. இம்முறை ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழ்க்குழுக்கள் வந்து இப்போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையினால் மைதானத்தின் சில பகுதிகள் சேறாகக் காணப்பட்டாலும் நடைபெற்ற போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றன.

7 பேர் கொண்ட குழுக்களுக்கிடையில் 'தோற்றோர் நீங்கல்' (KNOCKOUT) முறையில் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளின் ஆரம்பத்திலிருந்தே நோர்வே ஐக்கிய உதைபந்தாட்டக்குழு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது. இறுதிப் போட்டிக்கு வரும் அணிகள் குறைந்தது மூன்று போட்டிகளிலாவது பங்குபற்றியிருக்க வேண்டிய நிலையிருந்தாலும், நோர்வே அணி நாலு போட்டிகளில் பங்குபற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது.

இறுதிப் போட்டிக்கு வந்த அடுத்த அணியான இலண்டன் புளூஸ் உதைபந்தாட்டக் குழு, இலண்டனில் நடைபெறும் பல உதைபந்தாட்டப் போட்டிகளில் பல வெற்றிகளை பெற்றுவரும் அணி என்பது இங்கு குறிப்பிடக்கூடியது. இக்குழுவின் 'கோல் காப்பாளரான' உதயணன் மிகத் திறமையாக விளையாடி பார்வையாளர்களினதும் ஏனைய குழுக்களினதும் கைதட்டலைப் பெற்றார்.

போட்டிகளின் முடிவில் மூன்றாவது இடத்தை இலண்டன் ஈஸ்ட்காம் தமிழர் உதைபந்தாட்டக்குழு பெற்றுக் கொள்ள இறுதிப் போட்டியில் நோர்வே ஐக்கிய உதைபந்தாட்டக்குழுவும் இலண்டன் புளூஸ் உதைபந்தாட்டக்குழுவும் மோதின. விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் போது நோர்வே அணி 3 கோல்களைப் போட்டு வெற்றியீட்டிக் கொண்டது.



முன்னாள் இலங்கை உதைபந்தாட்டக்குழு அணித் தலைவரான S. N. J அந்தோனிப்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். பரிசளிப்பு வைபவத்தில் அவர் தனது உரையில், "தமிழர்கள் உலக அரங்கில் உதைபந்தாட்ட சாதனை படைக்க வேண்டும். இதுவே எனது நீண்ட நாளைய கனவு. நான் விளையாடும் காலங்களில் அது கைகூடவில்லை. இனி எமக்கென்று நாடு வந்து அதில் எம் இளைஞர்கள் அந்தச் சாதனையை நடத்திக் காட்ட வேண்டும்" என்று கூறினார். சிறப்பு விருந்தினர்களாக திரு. தாசீசியஸ்அவர்களும், டாக்டர் தெய்வேந்திரா அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். வெட்டியீட்டிய குழுக்களுக்கு பிரதம விருந்தினர் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வெற்றிக்கிண்ணங்களை வழங்கினார். தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நிதி சேகரிக்கு முகமாக வருடா வருடம் இச்சுற்றுப் போட்டிகளை நடத்தும் தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பிரித்தானியாக் கிளையின் காரியாலயப் பொறுப்பாளர் திரு. கந்தையா அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார். ■



# சென்றல் - சென். ஜோன்ஸ் பரபரப்பான ஆட்டம்

சென்றல் - சென். ஜோன்ஸ் 89 ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியன்றி முடிவுற்றது. இப்போட்டி அண்மையில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இரண்டு தினங்களும் பெருந்தொகையான மக்கள் மத்தியில் இப்போட்டி இடம் பெற்றது.

இப்போட்டியில் சென். ஜோன்ஸ் அணிவீரர்களான எஸ். சஞ்ஜீவ் 56 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் ஜி. சிறீதரன் 55 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் ஜோடியாக இணைந்து 8 வது விக்கெட்டுக்கு 111 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை நிலை நாட்டியமை குறிப்பிடத்தக்கது.

சென். ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 106 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. யாழ் மத்திய கல்லூரியின் சார்பில் பந்து வீசிய ஆர். லட்சுமிகான் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பிரமேசன், எஸ். மதிவதனன், எஸ். சதீஸ்குமார் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மீளவும் தொடர்ந்து விளையாடப் பணிக்கப்பட்டபோது இக்கல்லூரி ஒரு கட்டத்தில் 7 விக்கெட் நஸ்டத்திற்கு 82 ஓட்டங்களைப் பெற்று மிகவும் நெருக்கடியான நிலையில் ஜி. சிறீதரனும், எஸ். சஞ்சீவும் மிகவும் நிதானமாகவும், சிறப்பாகவும் விளையாடி கிரிக்கெட் ரசிகர்களின் மனதைக் கவர்ந்து தமது கல்லூரிக்கு புகழ் தேடிக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி முடிவுற்றபோது சென். ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கெட் நஸ்டத்திற்கு 198 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆர். லட்சுமிகான் யாழ் மத்திய கல்லூரி சார்பில் சிறப்பாகப் பந்து வீசி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 46 ஓட்டங்களைக் கொடுத்தார்.

இப்போட்டிக்கு திரு. வித்தியாதரனும், திரு. சுசேந்திரலிங்கமும் சிறப்பாக மத்தியஸ்தம் வகித்தனர்.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரராக கே. சுரேஸ் (யாழ். மத்திய கல்லூரி); சிறந்த பந்து வீச்சாளராக ஆர். லட்சுமிகான் (யாழ் மத்திய கல்லூரி; சிறந்த சகலதுறை வீரராக ஜி. சஞ்சீவ் (சென். ஜோன்ஸ் கல்லூரி; சிறந்த மைதான வீரராக எஸ். பீஸ்மன் (சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ■

## சூறாவளி-1.....

பாதுகாப்பு அமைச்சர் கொழும்பு திரும்பி 48 மணி நேரத்துக்குள் நடாத்தப்பட்டுள்ளது:

மன்னார் நகர்ப் பகுதியில் உணவு களஞ்சியத்திற்கு அருகில் நடை பெற்ற மற்றொரு தாக்குதலில் 4 சிறீலங்கா படையினர் உயிரிழந்துள்ளனர். மேலும் மன்னார்க் கடலில் வைத்து சிறீலங்கா கடற்படையின் ரோந்து படகொன்றை விடுதலைப்புலிகள் அழித்தொழித்து விட்டதாகவும், இதில் சென்ற சிறீலங்கா கடற்படை லெப்டினன்ட் உட்பட மூவர் இறந்துள்ளதாகவும் ஊர்ஜிதமற்ற கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலால் சிறிலங்கா அரசு பெரும் கவலை அடைந்துள்ளதாகவும் பத்திரிகைச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

### மணலாறில்

இதற்கிடை மணலாறு பிரதேசத்தில் உள்ள சிறீலங்கா இராணுவத்தின் மீது தொடுத்த தாக்குதலில் 22 இராணுவத்தினர் கொல்லப்பட்டு பலர் படுகாயம் அடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவே இவ்வாண்டின் மிகப்பெரிய தாக்குதல் என BBC செய்தி நிறுவனம் இத்தாக்குதலை வர்ணித்துள்ளது.

### இராணுவத் தலைமைப் பீடத்தினுள் குழப்பம்

விடுதலைப்புலிகள், சிறிலங்கா இராணுவம் தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் எனக்கூறும் பகுதிகளில் நடாத்தும் ஊடுருவித் தாக்குதல்களும், சூறாவளி 1 தோல்வி அடைந்ததும் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையே பிளவைத் தோற்றுவித்துள்ளதாக தெரியவருகிறது. மாகாணசபைத் தேர்தல் நேரத்தில் சிறீலங்கா இராணுவத்தினதும், சிறிலங்கா அரசினதும் தோல்விகள் பலத் தாக்கங்களை ஏற்படுத்தலாம் எனவும் இதனை ஈடுசெய்வதற்கு சிறீலங்கா அரசு மீண்டும் பாரிய தாக்குதல் ஒன்றை கிழக்கில் அல்லது வடக்கில் ஆரம்பிக்கக் கூடுமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது. ■

## தென் தமிழீழ....

தமது முகாம்களுக்கு அருகிலுள்ள மக்களுடன் பழக முற்பட்டாலும் கூட மக்கள் அவர்கள் காட்டும் கவர்ச்சிகளில் ஈடுபடத் தயாராக இல்லை." இவ்வாறு B B C நிருபர், தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுநகர் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ளதையும் சிறீலங்காவின் இறைமை இங்கு செல்லாதிருப்பதையும் உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

### பாதிரியார் கண்டனம்

இதற்கிடை மட்டுநகர் பிரதேசத்தில் சமீபத்தில் காணாமல் போன 19 பொதுமக்கள் பற்றி விபரம் தரும்படி கேட்ட அமெரிக்க பாதிரியார் கரிமில்லருக்கு இதுவரை எதுவித விபரமும் கிடைக்கவில்லை. இதனால் இவ் அமெரிக்க பாதிரியார் கரிமில்லர் இப் 19 பொது மக்களும் எங்கே என விபரம் வெளியிடாத சிறீலங்கா அரசின் செயலை கடுமையாகக் கண்டித்துள்ளார். ■

## நிகழ்வும் ....

இதேவேளை, தெரிவுக்குழுவின் தோல்வி குறித்த நெருக்கடி எழுந்த கையுடன் மாகாண சபைத் தேர்தல் அறிவித்மையினை ஒரே கல்லில் இரு மாங்காய்களை அடிக்கும் தந்திரோபாயமாக நோக்கலாம்.

தனது பதவியினைத் தக்க வைத்துக் கொள்வதனையே பிரதான அரசியல் இலக்காகக் கொண்டுள்ள பிரேமதாசாவுக்கு, அடுத்த வருடம் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் வியூகம் அமைப்பதற்கு 1993 இல் ஒரு தேர்தல் அவசியமானதாகவே இருக்கும்.

பிரேமதாசா எவ்வளவுதான் இராஜதந்திரமாகக் காய்களை நகர்த்த முனைந்தாலும் அவை வரலாற்றின் தர்க்கரீதியான வளர்ச்சியினை மீறிச் செயற்படாது. தமிழ்த் தேசிய இனம் தனக்குரிய அரசினை அமைத்துக் கொள்ளலே தமிழ் மக்களின் பிரச்சனைக்குரிய தீர்வாக அமையமுடியும் எனும் அளவுக்கு இனப்பிரச்சனை தர்க்கரீதியான வளர்ச்சியினை அடைந்துள்ளது. எனவே இலங்கைத் தீவில் இரு தேசங்கள் தோன்றும்வரை தீவில் நிரந்தர அமைதியினை ஏற்படுத்த எவராலும் முடியாது என்றே எண்ணத் தோன்றுகின்றது! ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பசியல்ல தாகம்..

...வர்களுக்கு மேல் இருந்தார் ...ர. எல்லாருக்கும் இவன் ...ன் தலைவன் போல. இவன் ...ன்னால் எல்லோரும் கேட் ...ர்கள். இவன்கூட இருந்தால், ...தாவது பிழை நடந்தாலும் ...ர் பேசமாட்டார் என்று மற் ...ர்களுக்குத் தேரியும். யாரா ...து புதுப்பொடியன் விளையாட ...ந்தால் இவனைக் கேட்டு விட் ...த்தான் தங்களுடன் சேர்த்து விளையாடுவார்கள். ஒரு குட்டி ...ராஜாபோல அந்தக் கோவிலடி யில் அவன் விளங்கினான்.

இன்று அவனுடைய நிலை அவனுக்கே புரியவில்லை. இனி எங்காவது போனால் தன்னை யாராவது சேர்த்தக்கொள்வார் ...ளோ? தாங்கள் புதிதாக யாரும் ...தால் எப்படி நடக்துவோம் ... யோசித்துபார்த்தான். ...க வந்தால் அவனைக் ...சியாகத்தான் ஆடவிடுவார் ... அங்கு பக்கத்தில் பற்றைக் ...ரிக்குள் பந்து விழுந்தால் ... ஆள்தான் எடுத்துவரவேண் ... இனி யார் எனக்கு சாப் ... தருவார்கள்? சரிதான் சாப் ...டுதான், ஒரு நாளைக்கு ஒரு ...டத்தில் என்று சமாளிக்க ...ம். இன்னுனொருவர் அன் ... ஐயர் மாதிரிக் கிடைத்தா ... கிடைக்கலாம். ஆனால் ...னை மரியாதையாக நடத் ...வார்களா? "அகதிப்பெடியன்" ...ன்று தான் கூப்பிடுவான் ...களோ? தங்கள் கோவிலடியில் "ராசன் " என்று மற்றவர்கள் கூப்பி, தான் நடத்திய ராச்சியம் தான் அவனுக்கு மீண்டும் மீண் டும் நினைவிற்கு வந்தது. அவனுக்கு பசி இப்பொழுது முழுவதுமாக மறந்து போயிருந் தது. அவனது பூமி ஞாபகத் திற்கு வந்தது.

'இரவு படுக்கிற மண்டபம் இப்ப இடிஞ்சு போயிருக்குமோ? கோயில் வீதியெல்லாம் ப்ப குண் டும், குழியுமாக இருக்கும். ஏன் கோவில் கூட இடிஞ்சுஇருக் கும். அந்த கோயில் வீதியில் ஒரு பெரிய மாமரம் இருந்தது. அதன் காய் புளிக்காது. மிகவும் ருசியாக இருக்கும். பெரிய ஆக் கள் கூட இவன்களிடம் கேட் டுவாங்கிச் ...ாப்பிடுவினம். இப் பத்தான் அது நிறைய சின்னச் சின்ன பிஞ்சு பிடித்திருந்தது. இப்ப அதெலேல்லாம் முறிஞ்சு போயிருக்கும். இனி நாம் எங் கட இடத்திற்கு போகமுடியாது. ஒருக்கால் எண்டாலும் பார்க்க முடியாதோ? ஏன் முடியாது? எப் படியெண்டாலும் ஒருக்கால் பார்க்கத்தான் வேணும்.'

அவனுக்கு தான் கோயிலடியில் விளையாடிக் கொண்டிருக்கும் போது கையில் துவக்குடனும், யூனிபோமுடனும் போகும் அண் ணாமாரின் ஞாபகம் வந்தது. அவர்கள் கோயில் கிணற்றில் தண்ணீர் குடிக்க வருவார்கள். அவர்களில் சிலர் நாளடைவில் அவனுக்குப் பழக்கமாகியும் விட் டிருந்தனர்.

அவன் தண்ணி அள்ளிக்கொடுப் பான். நல்ல மாங்காய் இருந் தால் கொடுப்பான். அப்ப ஓர் அண்ணா பகிடியாகக் கேட்டார், "தம்பி நீ எங்களோட வாறியோ". "ஆ... ய்" என்று மறுத்துவிட்டிருந்தான். அப் போது அவனுக்கு விளையாட் டும், கோயிலும்தான் உலகமாக இருந்தது. இன்று அவன் நிலை வேறு. அவனுக்கு பத்தோ பன் னிரண்டோ. வயது என்றாலும் யோசிக்ககூடிய வயதுதான். இதுவரை யோசிக்கவேண்டிய தேவை அவனுக்குவரவில்லை, இன்று இருந்தது. யோசிக்கி றான்.... யோசித்துவிட்டான். இப்ப அவனுக்குள் ஒரு தாகம் எழுந்திருந்தது. அதுவும் நெஞ் சில், முகத்தில் ஒரு தெளிவு வந் தது. அவன்தன் வருங்காலத்தை தீர்மானித்துவிட்டான். அவ னுக்கு இப்போது ஏன் இந்த வீட் டிற்கு வந்தனான் என்பதே மறந்து போயிருந்தது. அவனுக்கு இனி எங்கு போவதென்று தெரி யும். புறப்பட்டுவிட்டான்.

உள்ளே குசினிக்குள் தொடர்ந்து பேப்பர் படித்துக்கொண்டிருந்தார் கள்.

"புலிகள் தங்கள் இயக்கத்திற்கு பல வந்தமாக சிறுவர்களையும், முதியவர்களையும் சேர்த்து வரு கிறார்கள் என்று கொழும்பில் ......" ■

## என்ன குஞ்சாச்சி?




புதியவன்

புதிய முகவரி
விடுதலைப்புலிகளின் பிரித்தானியக்கிளை
211, Katherine Road,
Eastham, London E6 1BU.
அலுவலக தொலைபேசி இல: 081 – 503 4294
081 – 470 8593
தமிழ் தொலைபேசிச் செய்தி இல: 081 – 503 4305
0898 - 777663 (36p/min)
ஆங்கில தொலைபேசிச் செய்தி இல: 081 – 503 4307
Fax: 081- 470 8593

# நிகழ்வும் நினைவும்

– திலீபன் –

## ஏன் இந்த மாகாணசபைத் தேர்தல்?

சிறீலங்காவின் ஏழு மாகாணங்களுக்கான தேர்தல் திகதி தெரிவிக்கப்பட்டு தேர்தல் ஆரவா ரங்கள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன.

தெரிவுக்குழு, தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வு என்ற ஆர்ப்பாட்டமான 'அரசியல் தீர்வு முயற்சி'பிரச்சனையின் இயல்பான தர்க்கரீதியான வளர்ச்சியின் அடிப்படையில் தேல்வியினைத் தழுவத் தொடங்கியதும் மாகாணசபைத் தேர்தல் எனும் புதிய பரபரப்பினைத் தோற்றுவித்துள்ளது சிறீலங்கா அரசு.

தெரிவுக்குழுவின் தோல்விக்கும் மாகாணசபைத் தேர்தல் அறிவிப்புக்கும் இடையிலான தொடர்பு என்ன? பிரேமதாசாவின் தற்போதைய 'அரசியல் நோக்கு' என்ன? என்பனவற்றை இன்றைய 'நிகழ் வும் நினைவும்' பகுதியில் நோக்குவோம்.

இவ்விடயத்தினைக் குறித்து கருத்துக்களை முன்வைப்பதற்கு, தமிழீழத்தின் முக்கிய அரசியல் ஆய்வாளர் திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் தெரிவுக்குழுவின் தோல்வி குறித்து முன்வைத்த கருத்தினை இங்கு துணைக்கழைத்துக் கொள்கி றேன்.

"தெரிவுக்குழு விவகாரமானது பிரேமாவிற்கு அரசியல் ரீதியில் மாற்றுவழியற்ற நிலையினைத் தோற்றுவித்துள்ளது. இது பிரேமாதாசாவைப் பொறுத்தவரையில் இனப்பிரச்சனை சம்பந்தமாக அரசியற் தற்கெலையாகும்" எனக் கட்டுரையொன் றில் குறிப்பிட்டுள்ள திருநாவுக்கரசு அவர்கள், மேலும் "சமாதானத் தீர்வுக்கு தமிழர் தயாரில்லை என்று தமிழர் பக்கம் பழி போடமுடியாதவாறு, தெரிவுக்குழுவின் நடவடிக்கைகள் தமிழர் பக்கமி ருந்து குழப்பப்பட்டன என்று சொல்லமுடியாத வாறு, தமிழரின் தேசிய உரிமையை மறுப்பவர்கள் தாமே என்பதைச் சிங்களவர் உலகிற்கு அப்பட்ட மாகக் காட்டிய விவகாரமே தெரிவுக்குழு விவகா ரம்" எனவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இவரது இக்கட்டுரையிலிருந்து நாம் ஒரு விட யத்தினை தெளிவாக உய்த்துணர முடிகின்றது. 'அரசியற் தீர்வு, அரசியற் தீர்வு' என வாய் கிழியக் கூப்பாடு போடும் பிரேமதாசாவினால் தெரிவுக்கு முவின் தோல்விக்கு பின் அவ்வாறு கூப்பாடு போடுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிக்க முடியாது; ஆதலினால் பிரேமதாசாவின் அரசியல் நிலை, தெரிவு மூடுண்டதாக அமைகின்றது என் பதே அவ்விடயமாகும். (இங்கு மூடுண்ட நிலை என்பது மாற்றுவழியற்ற நிலையினைக் குறிக்கும்)

இந்த அரசியல் மூடுண்ட நிலையினை உணர்ந்து கொண்ட பிரேமதாசா, அம்மூடுண்ட நிலையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற் காகவே மாகாணசபைத் தேர்தல்களை அறிவித் துள்ளார் என்றே கருதவேண்டியுள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களை அறிவித்தமையின் மூலம் எவ்வாறு பிரேமதாசா தெரிவுக்குழு ஏற்படுத் திய நெருக்கடியில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளப் போகின்றார்?

முதலாவதாக, அரசியலில் குவியப் புள்ளியாக (Focus point) இருந்த 'தெரிவுக்குழு' விவகாரத் தினை பின் தள்ள மாகாணசபைத் தேர்தலினை சிறீலங்காவின் அரசியலில் குவிமையப் புள்ளியாக மாற்றியுள்ளார். இதனால்அரசியல் நிரலில் (Political agenda) தெரிவுக்குழு, இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ற சுலோகங்கள் முதன்மை இடத்தினைப் பெறுவதனை தற்காலிகமாகத் தவிர்த்துள்ளார். சிறீலங்காவின் முக்கிய கட்சிகள் அனைத்தும் மாகாணசபைத்தேர்தலில் தமது வெற்றி குறித்த சிந்தனையுடன் செயற்படும் சூழல், இனப்பிரச் சனை தொடர்பாக நிதானமாகச் செயற்படுவதற்கு ரிய கால அவகாசத்தினைப் பிரேமதாசாவிற்கு வழங்கியுள்ளது.

இக்கால அவகாசத்தினைப் பயன்படுத்தி, தெரிவுக்குழு விவகாரத்தில் சில 'முன்னேற்றங்க ளை'ச் செய்ய பிரேமதாசா முயற்சிக்கின்றார் என் பதனை அவதானிக்க முடிகின்றது.

தெரிவுக்குழு இன்னும் தனது இறுதியறிக்கை யினைச் சமர்ப்பிக்கவில்லை என்பதனை இங்கு கவனத்திற் கொண்டு நோக்கும்போது, பிரேமதா சாவின் நம்பிக்கைக்குரிய ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், E P R L F, T U L F, P L O T E ஆகிய குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நிகழ்த்திய நிகழ்வு பிரேமதாசாவின் ஒரு நகர்வை வெளிப்படுத்துகின்றது. பிரேமதாசாவின் சம்மதமின்றி நிச்சயமாக பிரட்மன் தமிழ்க்குழுக்க ளைச் சந்தித்திருக்கமாட்டார். தெரிவுக்குழுவின் இடைக்கால நகல் அறிக்கையினை நிராகரித்த தமிழ்க்குழுக்கள் அவசர அவசரமாக பிரட்மனை சந்திக்க வேண்டிய தேவை என்ன? இத்தகைய சந்திப்புக்கு பிரேமதாசா சம்மதம் அளிக்க வேண் டிய அவசியம் என்ன?

இங்கு தமிழ்க்குழுக்களின் நலன்களும் சிறீ லங்கா அரசின் நலனும் ஒரே கோட்டில் சந்திக் கின்றன. வட -கிழக்கு இணைப்பின்றி எந்தவொரு தீர்வையும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்ற கொழும் புத் தமிழ்க்குழுக்களின் பகிரங்க அறிவிப்பால் தெரிவுக்குழுவுடன் முரண்பட வேண்டிய நிலைமை தமிழ்க்குழுக்களுக்கு ஏற்பட்டது. ஆனால் தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்படும் தீர்வினை நிராக ரித்தால் தமிழ்க்குழுக்களின் அரசியல் எதிர்காலம் என்ன? இச்சூழலில் ஏதோ ஒரு வகையான வட - கிழக்கு இணைப்பினை தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கைக்கு முன் ஏற்படுத்திவிட தமிழ்க்குழுக்கள் பகீரதப்பிராயத்தனம் செய்கின்றன. இன்னொரு வகையில் கூறுவதாயின் தெரிவுக்குழுவின் ஆயுளி லேயே தமிழ்க்குழுக்களின் ஆயுளும் தங்கியுள்ளது எனலாம்.

மறுபக்கத்தில், கொழும்புத் தமிழ்க்குழுக்கள் கூட ஏற்றுக் கொள்ளாத ஒரு அரசியற் தீர்வை 'அரசியற் தீர்வு' என்று கூறிக்கொண்டு எவ்வாறு சிறீலங்கா அரசால் நடைமுறைப்படுத்த முடியும்? (கொழும்புத் தமிழ்க்குழுக்கள் உடன்பட்டாலும் விடுதலைப் புலிகளின் உடன்பாடற்ற ஒரு தீர் வினை நடைமுறைப்படுத்த முடியாது என்பதனை உணர்ந்திருந்தும் அத்தகைய தீர்வுக்கு வரமுடியாத இயலாமையின் வெளிப்பாடாகவே அமையும் சிறீ லங்கா அரசின் குளறுபடிகளே இவை.) எனவே கொழும்புத் தமிழ்க்குழுக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வுக்குப் போவது அல்லது முன்வைக் கப்படும் தீர்வினை கொழும்புத் தமிழ்க்குழுக்கள் ஏற்க வைப்பது எனும் தந்திரோபாயமே தனது அரசியல் மூடுண்ட நிலையினைத் தவிர்ப்பதற்கு பிரேமதாசாவினால் கைக்கொள்ளப்படும் நடைமு றையாகக் காணப்படுகின்றது.

தமிழ்க்குழுக்கள் - பிரட்மன் சந்திப்பில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஏதோ ஒரு வகையிலான வடக்கு -கிழக்கு அமைப்பு அவசியமென்றும் எல்லைகளை மீள நிர்ணயம் செய்தல் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென்றும் பிரட்மன் தெரிவித்ததாக தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இது குறித்து EPRLF, சிங்களவர் அதிகம் உள்ள பகுதிகளைத் தவிர்த்து ஏனைய வட -கிழக்கு பகுதிகளை இணைக்கலாம் எனக் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படு கின்றது.

இவற்றை அடிப்படையாகவும், தெரிவுக்குழு வடக்கிற்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடாத்த உள்ளதாகவும் வெளிவந்த செய்தியினை அடிப்படையாகவும் கொண்டு நோக்குகையில் ஏதோ ஒரு வகையில் தனது ஆயுளை நீடிப்பதற்கு தெரிவுக்குழு முயற்சிக் கின்றது என்பது தெளிவாகின்றது. இந்த ஆயுள் நீடிப்பு முயற்சிக்கு பிரேமதாசாவின் ஆசி இருக் கும்.

தெரிவுக்குழுவின் ஊடாகத் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியினை மாகாணசபைத் தேர்தலின் மூலம் திசை திருப்பி, தனக்குச் சாதகமான முறையில் காய்களை நகர்த்துவதற்காகப் பிரேமதாசா திட்ட மிட்டு செயற்பட்டு வருகின்றார். தமிழர் பிரச்ச னைக்கான தீர்வுக்கு தமிழர் தரப்பு ஒத்துழைப்பு நல்கவில்லை என்ற பிரச்சாரத்தினைத் தொடர்ச் சியாகச் செய்வதற்கு உரிய சூழல் ஏற்படுத்தவே பிரேமதாசா விரும்புகின்றார்.

இவற்றைவிட, மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு இன்னொரு காரணமும் கூறப்படு கின்றது. 1994 ஆம் ஆண்டில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலின் முன் தற்போதைய அரசி யல் களத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் ஒரு தேர்தல் பிரேமதாசாவிற்குத் தேவைப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து லலித், காமினி வெளியேறி புதிய கட்சி அமைத்தபின் ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மையான பலம் என்ன என்பதைக் கணிப்பீடு செய்வதற்கு ஒரு தேர்தல் பிரேமதாசாவைப் பொறுத்தவரை மிகவும் அவசியம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழத தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண் பால் - உயர்திணை.

இவர்கள் யார்?



U.T.O
211 Katherine Rd, London E6 1BU, UK
Tel/Fax: 081-470 8593

T.C.G
P.O.BOX 340251
5270 GUMMERSBACH - 34
GERMANY

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
T: 435 81142 F: 435 81191

W.T.C.C
BEDER Str - 101, 8002 ZURICH
SWITZERLAND
T/F: 01/2810852, 077/816609

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
T: 03-457 6347, F:03-5618224

புதிய முகவரி

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO - 1, NORWAY
T: 02-191280 F: 02-190114

L.T.T.E
P.O.BOX47, 7600 STRUER
DENMARK
Tel / Fax : 97-841231

T.C.C
Via MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3179

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்